2017 மார்ச் 01
புதன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 01 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 035

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
නවමණි දිනපතා

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திர ... குரல்





இலங்கை டெஸ்ட் அணியின் தலைவராக ஹேரத் 12»

ஜெனீவாவின் சவாலை இலங்கை வெற்றி கொள்ளுமா? 04»



இந்த இழி நிலைக்கு சமூகமே காரணம் 09»

# 64 புதிய கட்சிகள் பதிவுக்கு விண்ணப்பம்

## அங்கீகரிப்பு தொடர்பில் குழு நியமனம்

■ ஆதில் அலி சப்ரி

புதிதாக 64 அரசியல் கட்சிகள் பதிவுக்காக தேர்தல் செயலகத்துக்கு விண்ணப்பித்துள்ளன.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் புதிதாக அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கு தேர்தல் செயலகம் விண்ணப்பம் கோரி பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து 11 »»»»





## சிறைச்சாலை பஸ் மீது தாக்குதல்;

# தப்பிச் சென்ற வேன் மீட்பு

## 5 பொலிஸ் குழுக்கள் விசாரணை



11 »»»

## முஸ்லிம் சமய திணைக்கள புதிய பணிப்பாளராக அப்துல் மலிக்

■ ஆதில் அலி சப்ரி

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக அஷ்ஷெய்க் அப்துல் மலிக் நளீமியை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக 11 »»»»

## சைடம் 11 »»»

## நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவி இடை நிறுத்தம்

■ ஆதில் அலி சப்ரி

## மும்மானை விவகாரம்;

## நன்நடத்தை பிணைக்கு நிர்வாகம் ஆட்சேபம்

மும்மானை முஸ்லிம் வித்தியாலய விளையாட்டுத் திடல் தொடர்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏழு அங்கத்தவர்களுக்கெதிராக தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணை நேற்று குளியாப்பிட்டிய நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தம்பதெனிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் குற்றவியல் சட்டத்தின் 81ஆவது சரத்தின் கீழ் இந்த 11 »»»»

# தேசத்துரோகிகளான 82 பேர் தேசிய வீரர்களாக இன்று பிரகடனம்

## முஸ்லிம்களின் பெயர்கள் இடம்பெறவில்லை

■ ஆதில் அலி சப்ரி

பிரித்தானியருக்கெதிராக சுதந்திர போராட்டத்தில் பங்கெடுத்ததால் தேசத் துரோகிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த 82 பேரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய வீரர்களாக இன்று பிரகடனப்படுத்தவுள்ளபோதும், சுதந்திர போராட்டத்தில் பங்கெடுத்த முஸ்லிம்களின் பெயர்கள் அப்பட்டியலில் இடம்பெறவில்லை.

1804 மற்றும் 1818 கிளர்ச்சிகளில் மூவின 11 »»»»




# பட்டதாரிகள் விவகாரம்; பிரதமர் – கிழக்கு முதல்வர் பேச்சு

## அறிக்கை சமர்ப்பிக்க பிரதமர் பணிப்பு

கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

அலரி மாளிகையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற சந்திப்பில் கிழக்கு மாகாண பட்டதாரிகள் மற்றும் கிழக்கின் ஆளணி வெற்றிடங்கள் என பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

அத்துடன் இதன் போது கிழக்கு மாகாண பட்டதாரிகளின் கோரிக்கைகள் மற்றும் 11 »»»»





# நீதி வழங்குவதில் நல்லாட்சி அரசு உறுதி

## மனித உரிமை மாநாட்டில் மங்கள



நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதில் நல்லாட்சி அரசு உறுதியாக இருக்கின்றது என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடரின் 11 »»»»

# தேசத்துரோக பிரகடனம் உரிய நடவடிக்கை விரைவில்

## ஹிஸ்புல்லாவிடம் ஜனாதிபதி உறுதி

1804 ஜுன் 07ஆம் திகதி பிரித்தானிய அரசால் தேசத் துரோகிகளாக பிரகடனம் செய்யப்பட்ட 190 பேருக்கு எதிரான வர்த்தமானி அறிவித்தலை நீக்கி அவர்களை நாட்டுக்காக போராடிய தேசிய வீரர்கள் என பிரகடனம் செய்யுமாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை விடுத்திருந்தார். இந்நிலையில், இது சம்பந்தமாக தான் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 11 »»»»



# பிரதம நீதியரசராக பிரியசாத் டெப் நியமனம்



இலங்கையின் புதிய பிரதம நீதியரசராக, உயர்நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதியரசர் பிரியசாத் டெப்பின் பெயர் ஜனாதிபதியிடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசரான கே. ஸ்ரீபவன் நேற்றுடன் ஓய்வுபெற்றமையால், புதிய பிரதம நீதியரசரை தெரிவு செய்வதற்காக நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் அரசமைப்புச் சபை கூடியது.

சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் 11 »»»»

# நிதி அமைச்சர் ரவி மீது ஆதாரத்துடன் குற்றச்சாட்டு

## நிரூபித்தால் பதவி விலக வேண்டும்

## தினேஷ் குணவர்தன



■ அ. அருண் பிரசாந்த்

பொய்யான தகவல்களை வழங்கி நாட்டு மக்களை ஏமாற்றப் பார்க்கும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நாம் ஆதாரத்துடன் குற்றங்களை நிரூபித்த பின்னர் அவர் அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என்று ஒருங்கிணைந்த எதிரணியின் தலைவரான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். 11 »»»»





# இன நல்லிணக்கத்துக்காக புதிய அரசியல் கட்சி

இலங்கையில் இனங்களுக்கிடையிலான இணக்கத்தை நோக்காகக்கொண்டு தேசிய நல்லிணக்க முன்னணி என்ற புதிய கட்சியொன்றும் தேர்தல் செயலகத்தில் பதிவுசெய்ய 11 »»»»

# போராட்டங்களை தூண்டி ஆட்சி கவிழ்ப்புக்கு எதிரணி சதி

## முஜிபுர் ரஹ்மான் குற்றச் சாட்டு

■ அ. அருண் பிரசாந்த்

தேர்தலில் போட்டியிட்டு வெல்ல முடியாது என்ற காரணத்தினால் தான் போராட்டங்களைத் தூண்டிவிட்டு, இராணுவப்புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற ஒருங்கிணைந்த எதிரணி முயற்சித்து வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

எனினும், இவ்வாறான 11 »»»»



# வவுனியா வளாகத்தை பல்கலைக்கழகமாக தரமுயர்த்த நடவடிக்கை - றிஷாத்



வவுனியா வளாகத்தை பல்கலைக் கழகமாக மாற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

புதிய சாளம்பைக்குளம் ஆயிஷா வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அதிபர் கே.எம். பைசர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் கூறியதாவது,

வவுனியா மாவட்டத்தில் குறிப்பாக சாளம்பைக்குளப் பிரதேசம் இன ஐக்கியத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது. தமிழ்,முஸ்லிம் உறவுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இந்தக் கிராமத்தின் வரலாற்றுப் பாரம்பரியம் சிறப்பானது. இந்தக் கிராமத்துக்கும் எனக்கும் அரசியல் ரீதியான நெருக்கமான, நீண்ட கால உறவு இருக்கின்றது. வரலாறுகளை யாருமே இலகுவில் மறைத்தும் விட முடியாது. அழித்தும் விட முடியாது இந்தப் பிரதேச மக்கள் அகதிகளாகச் சென்று அல்லல்பட்டு வாழ்ந்த பின்னர் மீண்டும் இந்தப் பிரதேசத்துக்கு திரும்பினர். அகதிகளாகச் சென்று சாளம்பைபுரம் என்ற கிராமத்தை உருவாக்கிய வரலாறும் இருக்கின்றது.

அகதி மக்கள் இந்தப் பிரதேசத்துக்கு மீளத்திரும்பிய போது வித்தியாசமான பிரச்சினைகள் வித்தியாசமான கோணத்தில் எழுந்தன. குறிப்பாக காணி தொடர்பான பிரச்சினை ஏற்பட வழிகோலியது. அந்தப் பிரச்சினை இங்கு வாழ்ந்த மக்களின் நீண்ட கால உறவுக்கு பங்கம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் எனக்குள் எழுந்தது. எனினும் அந்தப் பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வு எட்டப்பட்டது. சாளம்பைக்குளப் பிரதேசத்தில் இருக்கும் வவுனியா வளாக மாணவர்கள் இந்த வளாகத்தை பல்கலைக்கழகமாக தரமுயரத்தித் தரும்படி என்னிடம் கேட்டார்கள். இந்தக் கோரிக்கை நியாயமானதாகும். பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப் பட்டால் அதைச்சூழவுள்ள கிராமங்கள் கல்வி நிலையில் மேம்பாடடைவதும் படித்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதும் இயல்பானதே. அந்த வகையில் நான் பயின்ற மொரட்டுவை பல்கலைக்கழகம் சிறப்பான உதாரணமாகும். காடாகக் கிடந்த அந்தப் பிரதேசம் கட்டடங்களாக காட்சி தருகின்றன. சாளம்பைக்குளத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டால் இதைச் சூழவுள்ள ஆயிஷா வித்தியாலயம் அல்-அக்ஷா வித்தியாலயம், சோப்பாளப்புளியங் குளம் ஆகியவை கல்வியில் மறுமலர்ச்சி யடையும். திறமையான மாணவர்களைக் கொண்ட இந்தப் பிரதேசம் எதிர்காலத்தில் கல்விமான்களையும் புத்திஜீவிகளையும் உருவாக்குமென்பதில் எனக்கு ஐய மில்லை.

அகதி வாழ்விலே அத்தனையும் இழந்த போதும் நமக்குள் அழியாதிருந்த ஒரே ஒரு செல்வமான கல்வியில் அக்கறை காட்டியதனால்தான் நாம் முன்னேறி இருக்கின்றோம். அதே போன்று மீள்குடியேறிய பின்னரும் கல்வியில் ஆர்வம் காட்ட வேண்டும். நமது நாட்டிலே அனைத்தும் இலவசம். ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடியும்வரை அனைத்தும் இலவசமாகவே கிடைக்கின்றன என்றார்.

இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் ஜயதிலக்க, அமைச்சரின் இணைப்புச் செயலாளர்களான முஜாகிர், முத்து முகம்மது, முன்னாள் நகரசபை உறுப்பினர் அப்துல் பாரி, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஹசன், மற்றும் பள்ளி பரிபாலன சபையினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பொலன்னறுவையில் மாதாந்தம் 150 சிறுநீரக நோயாளர்கள்

(குருநாகல் இக்பால் அலி)

பொலன்னறுவை மாவட்டத்தில் விவசாயப் பிரதேசங்களில் மாதாந்தம் 150 பேர் அளவில் சிறுநீரக நோயாளர்கள் புதிதாக இனங்காணப்படுவதாக பொலன்னறுவை மாவட்ட சிறுநீரகப் பிரிவின் பிரதான வைத்திய அதிகாரி மலிக் மெத்தசூரிய தெரிவித்தார். பொலன்னறுவை மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தின் போதே வைத்திய அதிகாரி இவ்வாறு இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

2016 -2017 ஆம் ஆண்டு காலப் பகுதியின் போது பொலன்னறுவை மாவட்டத்தில் 120,000 பேர் அளவில் முழுமையான பரிசோதனை உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்த அளவு எதிர்காலத்தின் போது 2340000 பேரை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பரிசோதனை வேலைத்திட்டத்திற்காக ஏனைய அமைப்புக்களின் ஆதரவையும் சுகாதார திணைக்களம் கோரவுள்ளது. தற்போது பொலன்னறுவை மாவட்டத்தில் சிறுநீரக மத்திய நிலையங்கள் 6 அமைக்கப் பட்டுள்ளன.

இதன் மூலம் கணிசமானளவு புதிய நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# தற்போதைய நெருக்கடி தொடர்பில் மருத்துவ சங்கம் விடுக்கும் அறிக்கை

தற்போதைய சூழ்நிலையானது சுகாதாரத்துறையிலும் பொதுமக்கள் மீது செலுத்தக்கூடிய தாக்கங்கள் தொடர்பில் இலங்கை மருத்துவச் சங்கமானது ஆழ்ந்த கரிசனையைக் கொண்டுள்ளது. எமது நாட்டின் மருத்துவத்துறைச் சரித்திரத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய, ஒரு தீர்மானம் எடுக்க வேண்டிய தருணத்தில் இருப்பதாகவே நாம் கருதுகிறோம் என இலங்கை மருத்துவசங்க தலைவர் பேராசிரியர் சந்திரிக்கா விஜேரத்ன தெரிவித்தார்.

தனது அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மருத்துவத் துறையினதும் மருத்துவக் கல்வியினதும் தரத்தினை உறுதி செய்வதில் இலங்கை மருத்துவக் கவுன்ஸிலும் இருப்பதாக இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆணையானது தற்போது கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்ற அண்மைய தீர்ப்பினால் இது வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்வியினை ஒழுங்குபடுத்துவதில் இலங்கை மருத்துவக் கவுன்சிலுக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்களே இருப்பதாக இலங்கை மருத்துவச் சங்கம் குறிப்பாகக் கருதுகிறது. ஆகவே, மக்களைத் தகுதியற்ற மற்றும் தரக்குறைவான மருத்துவப் பயிற்சியாளரிடம் இருந்து பாதுகாப்பதில் போதிய அதிகாரங்களைக் கொண்டுள்ள சுயாதீனமான ஒரு அதிகார சபையாக இலங்கை மருத்துவக் கவுன்சிலினை உருவாக்குவதற்குத் தேவையான சட்டத்தினை இயற்றுவது அவசியமான ஒரு தேவையாகும். இதை நோக்கிய ஆரம்ப முயற்சியாக எமது நாட்டில் மருத்துவக் கல்வி தொடர்பான ஆகக் குறைந்த தரநிர்ணயத்தினை நடைமுறைப் படுத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலினை உடனடியாக அமுல்படுத்த ஆவன செய்யுமாறு உரிய அதிகாரிகளை நாம் வேண்டுகிறோம்.

இந்நாட்டில் உள்ள சகல நிலை மருத்துவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அதியுச்ச மருத்துவ நிறுவனமான இலங்கை மருத்துவர் சங்கமானது முறையாக ஒழுங்கமைக்கப்பட்டு நெறிமுறைப்படுத்தப்படுகின்ற தனியார் மருத்துவக் கல்விக்கு எதிரானது அல்ல என வலியுறுத்துவதுடன் இது தொடர்பாக மேலும் விவாதிக்க வேண்டியும் உள்ளது. இலங்கையில் தனியார் மருத்துவக் கல்வி என்பதும் சைட்டம் பிரச்சினையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாகக் கருதப்பட்டாலும் இவை இரு வேறுபட்ட பிரச்சினைகள் என்பதே எமது நன்கு கலந்தாலோசிக்கப்பட்ட அபிப்பிராயமாகும்.

# கலேவல பட்டிவெல கிராமத்தில் அரச பாடசாலை ஆரம்பிக்க ஏற்பாடுகள்

( வஹக்கோட்டை ஏ.ஸீ.ஏ முனாஸ்)

மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை தேர்தல் தொகுதியில் கலேவல பிரதேச செயலாளர் பிரிவில் கலேவல நகரிலிருந்து 2 கி.மீ தொலைவில் அமைந்துள்ள பம்டிவெல, லகிவத்த ஆகிய இரு கிராமங்களும் பொருளாதார ரீதியாக தன்னிறைவடையாத கிராமமாகும். இந்த இரண்டு கிராமங்களிலும் சுமார் 88 முஸ்லிம் குடும்பங்கள் வசிக்கின்றனர். இந்த இரண்டு கிராமங்களிலிருந்து சுமார் 98 மாணவர்கள் பாடசாலைக்கு செல்கின்றனர். இவர்களில் சிலர் சிங்கள மொழி பாடசாலைக்கும் ஏனையவர்கள் சுமார் 5 கீ.மீ தொலைவில் அமைந்துள்ள முஸ்லிம் பாடசாலைக்கும் செல்கின்றனர். காரணம் பட்டிவெல கிராமத்தில் முஸ்லிம் பாடசாலை ஒன்று இல்லாதமையே.

இதனால் பாடசாலை செல்வதில் மாணவர்கள் பல்வேறு போக்குவரத்து மற்றும் கலாசார ரீதியான கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர் இதன் விளைவாக பலர் பாடசாலைக்கு பாதியிலே முற்றுப் புள்ளி வைக்கின்றமை கூடுதலாக உள்ளது. இதனை இல்லாதொழிக்க கிராமத்தின் தன்னிறைவுக்கு பாடசாலை ஒன்றின் தேவை இன்றியமையாதது.

பாடசாலைக்கென்று அடையாளம் காணப்பட்டுள்ள 2 ஏக்கர் காணியை முதல் கட்டமாக கொள்வனவு செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளதோடு இதற்கான 20 இலட்சம் தேவைப்படுவதோடு இதில் 10 இலட்சம் இன்னும் மிகுதி 10 இலட்சம் நல்லுள்ளங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள விரும்புகின்றனர்.

இதன் முதல் கட்டமாக பாலர் பாடசாலை முதல் 5ஆம் தரம் வரையிலான ஆரம்ப பாடசாலை ஒன்றை ஆரம்ப கட்டமாக உருவாக்குவதோடு மாணவர்கள் தமது ஊரிலேயே கல்விக்கான வாயிலைத் திறந்து கொடுக்க முழு முயற்சி எடுப்பதோடு இதற்காக பொதுமக்களின் உதவிகளையும் ஆலோசனைகளையும் பட்டிவேல அல் மஸ்ஜிதில் அக்ஸா ஜும்ஆப்பள்ளிவாசல் வேண்டுகோள் விடுக்கின்றது. பணவுதவி வழங்குவோர் இலங்கை வங்கி கலேவெல கிளையில் அல் மஸ்ஜிதில் பள்ளிவாசல் இல- 8038838 அனுப்ப முடியும் என்று அறிவித்து உள்ளது. அத்தோடு பள்ளி தலைவர் பவ்ஸிக் ஹாஜியின் இல. -0777197729 அல்லது செயலாளர் டபிள்யு . ஏம். ஸமீர் நளீம் இல. 0718322411 ஆகிய இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கேப்பாபுலவு ஆர்ப்பாட்டத்திற்கு சட்டத்துறை மாணவர்கள் ஆதரவு




(யாழ். பாறுக் ஷிஹான்)

கேப்பாபுலவு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் காணி விடுவிப்பை வலியுறுத்தியும் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் கண்டனப் பேரணியும் விழிப்புணர்வு நிகழ்வொன்றும் நேற்று இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பேரணியில் நாம் கேட்பது தனி நாடு அல்ல தாய் நிலமே , வாழும் உரிமை எமக்கு உண்டு, காணி உரிமை எமக்கு உண்டு, சுய கௌரவம் எமக்கு உண்டு , போன்ற பதாதைகளை தாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரபாகரனுக்கு விளக்கமறியல்

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு மாநகர முன்னாள் மேயர் சிவகீதாவின் கணவர் பிரபாகரனை மார்ச் மாதம் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவு பிறப்பித்தார்.

மட்டக்களப்பு முன்னாள் மேயர் சிவகீதா பிரபாகரனின் வீட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கோடரி வெட்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த பிரபாகரன் (வயது 47) கைது செய்யப் பட்ட நிலையில் திங்களன்று மட்டக் களப்புப் பொலிஸாரால் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டார். இச் சம்பவம் தொடர்பிலே பிரபாகரன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தலசீமா நோயாளர்களுக்கு விசேட சிகிச்சை பராமரிப்பு

வடமேல் மாகாணத்தில் உள்ள தலசீமா நோயாளர்களுக்காக தற்போது மேற்கொள்ளப்படும் சிகிச்சைப் பராமரிப்பு போதாமையின் காரணமாக அதற்கான விசேட வேலைத் திட்டம் ஒன்றை அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாக மத்திய மாகாண சபை உறுப்பினர் பண்டார ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் தலசீமியா நோயாளர்கள் 4,000 பேர் அளவில் உள்ளனர். அதில் 1000 பேர் அளவு வடமேல் மாகாணத்தில் உள்ளனர். இவர்கள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்கோனையில் சலவாத் மஜ்லிஸ்

இந்திரிலிகொட மக்கொன அல் மத்ரஸதுல் மஹ்தூமியாவில் மாதாந்தம் மாதர்களால் நடாத்தப்பட்டு வரும் ஸலவாத் மஜ்லிஸின் மார்ச் மாதத்திற்கான நிகழ்ச்சி எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு மத்ரஸாவில் நடைபெறும் என குழுத்தலைவி மக்கொன ஸுல்பிகா மஜ்லிஸ் தெரிவித்தார்.

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த கிண்ணியாவுக்கு விசேட வைத்தியக்குழு

(கிண்ணியா ஹஸ்பர் ஏ ஹலீம் )

திருகோணமலை மாவட்டத்தில் பல பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள டெங்கு நோயைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சின் உதவியுடன் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் விசேட வைத்திய குழுவொன்று திருகோணமலைக்கு கொழும்பில் இருந்து விஜயம் செய்யவுள்ளதாகவும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

அவர் தனது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிப்பதாவது, கிண்ணியாவில் இது வரைக்கும் மூன்று உயிரிழப்புக்கள் டெங்கு நோயினால் ஏற்பட்டதாகவும் திருகோணமலை மாவட்டத்தில் இன்று வரை 1050 நோயாளர்கள் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் கிண்ணியாவில் தங்கி நின்று சிகிச்சை பெறமுடியாதளவுக்கு வாட் தொகுதிகள் காணப்படுகின்றன. இதனை நிவர்த்தி செய்ய கிண்ணியா தள வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள ஜாயா வித்தியாலய கட்டடத்தை பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் பொது சுகாதார அதிகாரிகளுடன் சேர்ந்து தொண்டர்கள் 50இற்கு மேற்பட்டோர்களை கள நடவடிக்கைகளில் ஈடுபடுத்த அவசர நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கிண்ணியாவில் வைத்திய அதிகாரிகள் குறைவாகவுள்ளமையாலும் அருகாமையில் உள்ள மாவட்டங்களில் இருந்து விசேட வைத்தியர்களைப் பெறுவதற்கு பிரதி சுகாதார அமைச்சர் பைசல் காஸிமிடம் வைத்தியர்களை கொண்டுவர முயற்சிகள் எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.







கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் 195ஆவது வருடாந்த கொடியேற்ற விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கல்முனைக்குடி முஹைதீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவர் டாகடர் எஸ்.எம்.ஏ. அஸீஸ் தலைமையில் கொடியேற்ற வைபவம் இடம்பெற்றது. இவ் விழாவில் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், கல்முனை பிரதேச செயலாளர் முஹம்மட் கனி , பாதுகாப்பு படை உயர் அதிகாரிகள் ,உலமாக்கள் மற்றும் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பெருமளவிலானவர்கள் கலந்துகொண்டனர். (படங்கள் - றியாஸ் இஸ்மாயில்)

# துமிந்த சில்வா

## தேசிய வைத்தியசாலையில்



மரண தண்டனை கைதியான முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவித்தன.

சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த துமிந்த சில்வாவின் நோய் நிலைமையானது மோசமானதால் அவர் அதிகாலை வேளையில் வாந்தி எடுத்துள்ளார். இதன் போதே, கடும் பாதுகாப்புடன் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இதன்போது பொலிஸ் பாதுகாப்பும் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கடுமையாக வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தொடரப்பட்டுள்ள மூன்று வழக்குகளில் சந்தேகநபராகவுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் ரங்க திசாநாயக்க நேற்று உத்தரவிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலப்பகுதியில் மூன்று வருட காலப்பகுதிக்கான தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளியிடாமை தொடர்பில் துமிந்த சில்வா மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்குகள் நேற்றைய தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே கொழும்பு மேலதிக நீதவான், துமிந்த சில்வாவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

# விற்பனைக்கு உதவாத

## 42,100 கிலோ அரிசி மீட்பு



விற்பனை செய்வதற்கு நிராகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களில் கபடாவில் வைக்கப்பட்டுள்ள 42,100 கிலோ அரிசி நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளது.

மேலும், அரிசியை கட்டுப்பாட்டு விலைக்கு அப்பால் கூடுதலான விலையில் விற்ற வர்த்தகர்கள் 86 பேருக்கும் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் நுகர் அதிகாரசபை குறிப்பிட்டது.

இதேநேரம், நுகர்வோர் அதிகார சபையால் கடந்த பெப்பரவரி மாதம் மாத்திரம் 2064 வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டு 1367 பேருக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் நுகர்வோர் அதிகாரசபை குறிப்பிட்டது.

# மின்சாரத்திற்காக

## 51 பில்லியன்

எதிர்வரும் 6 மாதங்களில் மின்சார உற்பத்திக்காக 51 பில்லியன் ரூபா மேலதிக செலவீனத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் புதுப்பித்தல் சக்தி அமைச்சு குறிப்பிட்டது.

நீர்மின் உற்பத்தி தற்போது 8 முதல் 10 வீதத்திற்கு இடையில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், நாட்டிலுள்ள பிரதான நீர்த் தேக்கங்களில் தற்போது 30 முதல் 31 வீதமான மட்டத்திலேயே நீர் காணப்படுவதாகவும் அவ்வமைச்சு சுட்டிக்காட்டியது.

நாளாந்த மின்சார தேவையின் மிகக் குறைந்தளவு மின்சாரமே நீர்மின் உற்பத்தி மூலம் பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் மிக்சக்தி அமைச்சு குறிப்பிட்டது.

# பொருளாதார நெருக்கடியிலும் வறிய மக்களுக்கு முன்னுரிமை

## - ஜனாதிபதி





உலக பொருளாதார நெருக்கடியினால் நாடு பொருளாதார சவால்களை எதிர்கொள்ள நேரிட்டாலும் வறிய மக்களின் நலனுக்கு அரசு முன்னுரிமை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி; தெரிவித்தார்.

கொழும்பு மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற பேண்தகு நிதி தொடர்பான செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மைததி ;ரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

சுமார் முப்பது சதவீதமான நாட்டு மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதுடன், 2017ஆம் ஆண்டினை வறுமையை இல்லாதொழிக்கும் ஆண்டாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. அதனை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு நிதித்துறையைச் சார்ந்த சகலரினதும் ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றேன்.

பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதில் சூழல் பாதுகாப்பும் மிக முக்கியமாகும். பேண்தகு அபிவிருத்தி கொள்கை முகாமைத்துவம் தொடர்பாக அனைத்து துறைகளையும் சார்ந்த புத்திஜீவிகளினதும், நிபுணர்களினதும் வழிகாட்டல் அவசியமாகு.

சூழல் பாதுகாப்புடன் கூடிய பௌதீக வளங்களின் அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட எதிர்கால அபிவிருத்திப் பணிகளில் நிதிக்கொள்கைகளும் முகாமைத்துவமும் சிறந்த முறையில் பேணப்பட வேண்டும் என்றார்.

மத்திய வங்கி உள்ளிட்ட நிதி நிறுவனங்கள், சுற்றாடல் அமைச்சு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து தேசிய செயற்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதன் தேவைப்பாடு குறித்தும் சுட்டிக் காட்டினார்.

இலங்கை மத்திய வங்கி, சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பேண்தகு வங்கி வலையமைப்பு என்பவற்றுடன் இணைந்து இச் செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, சர்வதேச நாணயநிதியம் மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகளும், உள்நாட்டு வெளிநாட்டு நிதித்துறைசார்ந்த வல்லுநர்கள் மற்றும் நிபுணர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

# ஊவ வெல்லஸ்ஸ புரட்சி

## வீரர்களுக்கான வைபவம் இன்று

தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக வரலாற்றில் முக்கியத்துவம் மிக்க புரட்சிக்கு புத்துயிர் அளிக்கப்பட்டமை தவறு என்று கருதி ஏகாதிபத்தியவாதிகளால் தேசத்துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டவர்களை உண்மையான நாட்டுப்பற்றுள்ளவர்களாக பிரகடனப்படுத்தும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று (01) மாலை 4.00 மணிக்கு கண்டி மகுள் மடுவவில் நடைபெறவுள்ளது.

1918ஆம் ஆண்டு ஊவ வெல்லஸ்ஸ புரட்சியில் கலந்து கொண்டதினால் மரணதண்டனை விதிக்கப்பட்டு உயிரிழந்த மற்றும் நாடு கடத்தப்பட்ட சுமார் 84 பேர் நாட்டுப்பற்றுள்ளவர்களாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவிப்பு ஜனாதிபதியினால் இதன்போது கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க இந்த நிகழ்வில் மல்வத்து அஸ்கிரி பீடங்களை சேர்ந்த மகாநாயக்கர்கள் மாகாசங்கத்தினர் சபாநாயகர் தலைமையிலான அமைச்சர்கள் அரச அதிகாரிகள் இந்த வீரர்களின் குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இந்த வைபவம் இன்று மாலை 4.00 மணிமுதல் ரூபவாகினி தொலைக்காட்சியில் நேரடியாக ஒலிபரப்பப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கேப்பாப்புலவு பிலக்குடியிருப்பு மக்களின் காணிகள் விடுவிப்பு

கேப்பாப்புலவு, பிலக்குடியிருப்பில் 42 ஏக்கர் காணிகள் இன்று விடுவிக்கப்படும் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு,மீள்குடியேற்றம்,மற்றும் இந்து மதஅலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறுகையில்,

கடந்த 28 நாட்களாக கேப்பாப்புலவு, பிலக்குடியிருப்பு கிராம மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்கள். இதனைக் கருத்திற் கொண்டு கடந்த 14 ஆம் திகதி ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்தோம். அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளிற்கும் படைத்தரப்பினருக்கும் காணி விடுவிப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல்களை வழங்கினார். பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னதாக காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக அவ்வேளையில் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இவ் விடயம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் (பெப்ரவரி 27) ஜனாதிபதியோடு கலந்துரையாடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது என்றார்.

# மார்ச் 2-4 இல் நாட்டில் மழை

இலங்கையில் தற்போது வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு காரணமாக எதிர்வரும் சில நாட்களில் மழை வீழ்ச்சியின் அளவு அதிகரிக்கப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாளை முதல் 4 ஆம் திகதி வரை நாட்டில், மழை வீழ்சசி அதிகரிக்கக்கூடிய சாத்தியம் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்ளம் மேலும் தெரிவித்தது.

மேலும், பிற்பகல் 5.30 மணிக்குப் பின்னர் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை அவ்வப்போது இடியுடன் கூடிய மழை பெய்யும் வானம் இருள் சூழ்ந்து காணப்படுவதோடு, கடற்கரை பிரதேசங்களிலும், மழை அல்லது இடியுடன் கூடிய மழை பொழியும்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு பகுதிகளில் காற்று 30 -40 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. கொழும்பிலிருந்து மன்னார் புத்தளம் வழியாக ஹம்பாந்தோட்டை பொத்துவில் மற்றும் மட்டக்களப்பு வழியாக காலி திருகோணமலை கடற்கரை பகுதிகளுக்கு காற்றின் வேகம் 50-55 கிலோமீற்றர் வேகத்தில் அதிகரிக்கும் என்று திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. கிழக்கு ஊவா சப்ரகமுவ மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களின் சில பகுதிகளில், மணிக்கு சுமார் 50 மில்லிமீற்றருக்கு அதிகளவான மழைவீழ்ச்சி காணப்படும். கடற்பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழை அதிகமாக காணப்படுவதால் 55-60 கிலோமீற்றருக்கு அதிகமான வேகத்தில் காற்று வீசும் என்றும் திணைக்களம் சுட்டிக்காட்டியது.

# சிரேஷ்ட மாணவர்கள் மூவர் கைது

**(வத்துகாமம் நிருபர்)**

குண்டசாலைப் பிரதேசப் பாடசாலை ஒன்றில் சில மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்கள் சிலர் துஷ்பிரயோக நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டதாகச் சந்தேகத்தில் அதே பாடசாலையைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட மாணவர்கள் நேற்றையதினம் கைதுசெய்யப்பட்டனர்.

பொலிஸ் அவசர தொலைபேசி சேவைக்குக் கிடைத்த தகவலின் படி பாடசாலையில் இடம் பெற்ற பயிற்சி வகுப்பு ஒன்றின் போது கனிஷ்ட மாணவர்கள் சிலரை நிர்வாணமாக்கி அதனை வீடியோவில் பதிவு செய்தமை தெரியவந்தது. அத்தகவல் தொடர்பாக வத்துகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோதே மேற்படி மாணவர்கள் கைதாகினர். இவர்கள் தரம் 11,12,13 ஐச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களை தெல்தெனிய நீதவான் முன் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# 2015 ஜனவரி 1 ஆம் திகதிக்கான வர்த்தமானி அறிவித்தல் தகவல்

## 19 மாதங்களின் பின்பே கையளிப்பு

### பதில் அச்சகர் சாட்சியம்

மத்திய வங்கியின் அரச கடன் பிரிவினால் பிணைமுறி தொடர்பாக 2015 ஜனவரி முதலாம் திகதிக்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் திகதியை ஒதுக்கிக் கொண்டாலும் அதற்கான தகவல்களை 21 மாதங்களுக்குப் பின்பே தனது திணைக்களத்துக்குத் தந்ததாக பதில் அச்சகர் கங்கானி கல்பனா தொம்பாகொட தெரிவித்தார்.

பிணைமுறி தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழு முன்னிலையில் அவர் சாட்சியமளித்த போதே இதனைத் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக 2015 இல் 268064 மில்லியன் ரூபா தொடர்பான பிணை முறியை விநியோகிப்பதற்காக வர்த்தமானி அறிவித்தலுக்காக அப்போதைய நிதி அமைச்சராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ திகதியை ஒதுக்கிக் கொண்ட போதும் அந்த வர்த்தமானி அறிவித்தலும் இது வரை அச்சிடப்படவில்லை என பதில் அச்சகர் தெரிவித்தார்.



2015 ஜனவரி மாதம் வர்த்தமானியியை வெளியிடுவதற்கான விபரங்கள் 2016 நவம்பர் 18 ஆம் திகதியே கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

# தோட்ட காணிகளை வெளியாருக்கு வழங்காதே;

# உன்னஸ்கிரியவில் பாரிய போராட்டம்



தோட்டக் காணிகளை வெளியாருக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக அரசினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் கண்டித்து கண்டி, உன்னஸ்கிரிய, எயாபார்க் தோட்ட மக்கள், தொழிலாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்;.

தமது கோரிக்கைகளை ஏற்று இதற்கான ஒரு தீர்வினை வழங்கும்வரையிலும் இப்போராட்டம் ஓயாது என்றும் போராட்டத்தில் களமிறங்கியுள்ள தோட்டத்தொழிலாளர்கள் அரசை எச்சரித்தனர்.

இவ்வாறு இரவு- பகலாக போராட்டமொன்று இலங்கையில் இடம்பெறுவது இதுவே முதல் முறை என்றும் கூறப்படுகின்றது. அந்தவகையில், நேற்றைய தினம் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தோர், அரசே, அரசே தொழிலாளர் வயிற்றில் அடிக்காதே, அமைச்சர்களின் பிள்ளைகள் வெளிநாட்டில், நாங்களோ இன்று நடுரோட்டில், தோட்டம் இங்கே அழிகிறது, தொழில் அமைச்சரே உன் அமைச்சு என்ன செய்கின்றது, செத்தாலும் பரவாயில்லை, தீர்வுகிட்டும்வரை ஓயாமாட்டோம் கோஷங்களை எழுப்பி அரசுக்கு தமது எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளியொருவர் கருத்து வெளியிடுகையில்,

கண்டி மாவட்டத்தில் அமைந்திருக்கும் எயாபார்க் தோட்டமானது, இலங்கை பெருந்தோட்ட கூட்டுதாபனத்தின் கீழ் இயங்கி வருகின்றது. இத்தோட்டத்திலுள்ள 6 டிவிசன்களின் 1800 பேர் வசித்துவருகிறார்கள்.

அதிகமான தொழிலாளர்கள் கடந்த காலங்களில் இத் தோட்டத்தில் முறையாக வேலை வழங்கப்படாத காரணத்தினால் வெளியிடங்களுக்கு வேலைத் தேடி சென்றுவிட்டார்கள் என போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தொடர்ந்து தெரிவித்தனர்.

# 5 சத வீதமான பெண் பிள்ளைகள் குறைந்த வயதில் கர்ப்பம்

## சர்வதேச குடிசன நிதியம்



**(பா.மலரம்பிகை)**

இலங்கையில் 19 வயதுக்கு கீழுள்ள நூற்றுக்கு 5 சதவீதமான பெண்பிள்ளைகள் குறைவயதில் கர்ப்பம் அடைவதாக ஐக்கியநாடுகள் சபையின் குடிசன நிதியம் தெரிவித்தது.

நேற்றையதினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகச் செயலமர்வில் இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஐக்கியநாடுகள் சபையின் குடிசன நிதியத்தின் நிகழ்ச்சி தரப்படுத்தல் அதிகாரி டாக்டர் ஜயான் அபேவிக்ரம தெரிவிக்கையில்,

எவ்வித பாதுகாப்பற்ற உடலுறவால் குறைவயது கர்ப்பம் அதிகரித்துள்ளதாகவும், இதனால் சுமார் 15 ஆயிரம் 19 வயதிற்கு கீழ் பெண்கள் கர்ப்பம் அடைவதாகவும் தெரிவித்தார்.

பாடசாலை மட்டத்தில் பாலியல் கல்வி தொடர்பான விளக்கமளிக்கும் கல்வி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென்றும் இதன் போது சுட்டிக்காட்டினார்.

மேலும், இதில் கருத்து தெரிவித்த ஐக்கியநாடுகள் சபையின் குடிசன நிதியத்தின் ஆலோசகர் சட்டத்தரணி காமனி ஜினதாச,

ஒருநாளைக்கு கொழும்பில் மாத்திரம் 700 கருக்கலைப்புக்கள் இடம்பெறுகின்றது. இந்த எண்ணிக்கையானது 7 வருடங்களுக்கு முன் எடுத்ததோடு, இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்க கூடும். இதில் முக்கியமானத என்னவெனில் திருமணம் முடித்தவர்களே; அதிகமாக கருக்கலைப்பில் ஈடுபடுகின்றார்கள் என தெரிவித்தார்.

இதேநேரம், சட்டவிரோதமான முறையில் கருக்கலைப்பில் ஈடுபட்டால் 3 வருட சிறைத்தண்டனையை எதிர்நோக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, நாடுதழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 90 சதவீதமான பெண்கள் மற்றும் சிறுமியர் பொதுப்போக்குவரத்து பஸ் மற்றும் புகையிரதங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாவது கண்டிறியப்பட்டுள்ளது.

'அவளின் பயணம் பாதுகாப்பானதா?' என்ற கருப்பொருளில், ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தால் ஆரம்பிக்கப்பட்ட பிரசார நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான விளக்கமளிப்பு, நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இவ்வாறு பாதிக்கப்படுவோரில் 4 சதவீதமானோரே பொலிஸாரின் உதவியை நாடுவதாகவும், மீதமுள்ள 96 வீதமானோர் சொல்லாமல் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

பொதுப் போக்குவரத்து உள்ளிட்டதாக, பெண்களும் சிறுமிகளும் சந்திக்கும் பாலியல் தொல்லைகள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு, பொலிஸ் அவசர அழைப்பு இலக்கமான 119க்கு அழைக்க முடியுமென, இலங்கைப் பொலிஸின் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவின் தலைவி எல்.ஆர். அமரசேன தெரிவித்தார்.

15 இக்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட பெண்கள் மற்றும் சிறுமியர் உள்ளடங்கலாக 2500 பேரை உள்ளடக்கியதாக 9 மாகாணங்களில் இந்த ஆய்வு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
01ST MARCH 2017 - WEDNESDAY

# முஸ்லிம் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் முஸ்லிம் சமூகம் பலப்படுத்த வேண்டும்

முஸ்லிம் ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பணக்காரர்கள் அல்லர். பெரும் தொழிலதிபர்கள் அல்லர். ஆனால் பலருடைய விமர்சனத்தையும் பெற்று, இந்தப் பணியை இந்த நாட்டிலே செய்கிறார்கள் என்றால் அவர்கள் எமக்கு கிடைக்கப் பெற்றிருக்கும் அருள் என்று நினைக்கிறேன்.

அண்மையில், அரநாயக்க வில்பொலையில் நடைபெற்ற, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின், மாணவர்களுக்கான ஊடக செயலமர்வின்போது அஷ்ஷெய்க் எஸ்.எல். நௌபர் (கபூரி) தெரிவித்த கருத்தையே நாம் மேலே மேற்கோள் காட்டினோம். இந்த நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு பாரிய உண்மையை அவர் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

இன்று உலகளவில் ஊடகத் துறை என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிலையில் இருப்பதனால், ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு சமூகமும், ஊடகத் துறையில் தம்மைப் பலப்படுத்திக்கொள்வதற்கு போட்டிபோட்டுக் கொண்டு செயற்படுவதை நாம் காண்கிறோம்.

மலேசியாவின் முன்னாள் பிரதமர் மஹாதிர் முஹம்மத் தெரிவித்திருந்த ஒரு கருத்து, இதனை இன்னும் வலியுறுத்துகின்றது. அதாவது, 19 ஆம் நூற்றாண்டில் கப்பல் படை வைத்திருந்தவர்கள் உலகை ஆண்டனர். 20 ஆம் நூற்றாண்டில் காலாட் படை வைத்திருந்தவர்கள் உலகை ஆண்டனர். ஆனால், 21 ஆம் நூற்றாண்டில் ஊடகங்களை வைத்திருப்பவர்கள் உலகை ஆள்கிறார்கள் என்று மஹாதிர் முஹம்மத் குறிப்பிட்டிருந்தார்.

மஹாதிர் முஹம்மதின் கருத்தை இன்று நாம் நிதர்சனமாகக் காண்கிறோம். அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், கட்டார் போன்ற ஜாம்பவான்கள் சர்வதேச ஊடகங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இவர்கள் இன்று உலக மக்களின் கருத்தை வடிவமைக்கிறார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரையில், சிறுபான்மை சமூகமான முஸ்லிம்களுக்காக வெளிவரும் பத்திரிகைகள் மிகவும் குறைவானதாகும். ஓரிரு தினசரிகளும், சில மாதாந்த சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் மட்டுமே வெளிவருகின்றன. இவையும் பெரும் நிதிச் சிக்கல்களுக்கு மத்தியிலேயே இயங்கி வருகின்றன.

முஸ்லிம் சமூகம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து, முஸ்லிம் சமூகத்தை விழிப்பூட்டி, அந்த விடயங்களை உரிய இடங்களுக்கு கொண்டு செல்லும் பணியை முஸ்லிம் ஊடகங்கள் செய்கின்றன. உண்மையில், முஸ்லிம் ஊடகங்கள் முஸ்லிம் சமூகத்தின் இருப்புக்கான ஒரு உத்தரவாதத்தை வழங்கி வருகின்றன என்றே சொல்ல வேண்டும்.

இவ்வாறான ஊடகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி, அவற்றை வளர்ப்பதற்கு பங்களிப்பு வழங்க வேண்டியது முஸ்லிம் சமூகத்தின் கடமையாகும். ஊடக நிறுவனமொன்றை நடாத்திச் செல்வதென்பது பெரும் கடினமான ஒரு விடயம், செய்தி சேகரிப்பு, கட்டுரை வரைவு என்பதற்கப்பால், நிறுவனத்தை நடாத்தி செல்வதற்கு விளம்பரங்களும், போதிய விற்பனையும் அவசியமாகின்றன. முஸ்லிம் ஊடகங்கள் இந்த விடயங்களில் பலப்படுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் அவர் சார்ந்த சமூகம் மீது ஒரு பொறுப்பு உள்ளது. அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டியது வாசகர்கள் முதல் ஒவ்வொருவரதும் கடமையாகும். எனவே, முஸ்லிம் வியாபார நிறுவனங்களும், தனவந்தர்களும் இந்த விடயம் குறித்து மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளமையை, இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

முஸ்லிம் ஊடக நிறுவனங்கள் போன்றே, முஸ்லிம் ஊடகவியலாளர்களும் மிகுந்த சிக்கல்களுக்கு மத்தியிலேயே இயங்கி வருகின்றனர். அச்சுறுத்தல்கள் ஒருபுறமிருக்க, ஊடகத் துறையில் நின்று பிடித்து, பணம் சம்பாதிக்கலாம் என்பது எல்லோராலும் சாத்தியப்படாத ஒரு விடயமாகும். ஆனாலும், சமூகம் மீது கொண்ட அக்கறையால் பலரும் ஊடகத் துறையில் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர். முஸ்லிம் சமூகம் இவர்களுக்கு நன்றிக்கடன்பட்டுள்ளது.

எனவே, ஒரு சிறுபான்மை சமூகம் என்ற வகையில், முஸ்லிம்களுக்கான ஊடகங்களையும், முஸ்லிம் ஊடகவியலாளர்களையும் பலப்படுத்த வேண்டியது முஸ்லிம் சமூகத்தின் பொறுப்பாகும். அதனைச் செய்வதற்கு முஸ்லிம் சமூகம் முன்வருமா?

---

# ஜெனீவாவின் சவாலை இலங்கை வெற்றி கொள்ளுமா?

**காமினி சரத் கொடகந்த**

2009ஆம் ஆண்டு வடக்கில் நடைபெற்ற யுத்தம் முடிந்து ஒரு வாரத்திற்குள் இலங்கையில் ஏற்பட்டிருக்கும் நிலைமை குறித்து விசாரிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 11ஆவது விசேட அமர்வு கூட்டப்பட்டது. 10 வாரங்கள் உள்ளடங்கும் வகையில் வருடத்திற்குள் 3 அமர்வுகளுக்குக் குறையாத கூட்டங்களை நடத்தும் அதிகாரம் மனித உரிமை ஆணைக்குழுவின் அங்கத்துவ பேரவைக்கு இருக்கின்றது. 47 அங்கத்துவ நாடுகளை 3/2 பங்கினர் கோரிக்கை விடுத்தால் மனித உரிமை மீறல் அல்லது ஏனைய அவசர சந்தர்ப்பங்களை கவனத்தில் கொண்டு விசேட அமர்வுகளை நடத்தும் அதிகாரம் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு இருக்கிறது. இலங்கையின் நிலைமை பற்றி விசாரணை செய்வதற்காகவே இந்த அமர்வு கூட்டப்பட்டது.

இங்கு முக்கிமாக வெட்டி தென்பட்ட காரணி இந்த விசேட அமர்வினை கூட்டுமாறு கோரிக்கை விடுத்தது ஜேர்மன் அரசாங்கத்தின் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர பிரதிநிதியாகும். எல்.ரீ.ரீ,ஈ. தோல்வியடைந்து அந்த இயக்கத்தினால் பிணைகைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 இலட்சம் இலங்கை பொதுமக்களைமீட்ட பிறகு மோதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக அறிக்கையிடப்பட்டது 2009. மே 19ஆம் திகதியாகும். மோதல் நடைபெற்ற கடைசி சில தினங்களுக்கு முன் எல்.ரீ.ரீ,ஈ. தலைமைத்துவத்தை அழிவிலிருந்து மீட்பதற்காக பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் முயற்சி செய்தாலும், எல்.ரீ.ரீ,ஈ. பயங்கரவாதத்திற்கு எதிரான சண்டையை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானம் குறித்து இந்த நாடுகள் கோபத்துடன் இருந்தமை தெளிவாகும்.

மனித உரிமை மேம்பாடு மற்றும் பாதுகாப்பதில் நாடுகளுக்கான ஆதரவு என்ற பெயரில் இலங்கை முன்வைத்த 11/1 பிரேரணைக்கேற்ப மனித உரிமை ஆணைக்குழுவின் 29 நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கைக்கு இயலுமாகையினால் நாட்டுக்கு எதிராக தடை பிறப்பிப்பதற்கு மேற்கு நாடுகள் மேற்கொண்ட முயற்சி பயனளிக்காது போனது.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவல்ல. எல்.ரீ.ரீ,ஈ. க்கு எதிரான மோதலில் முதல் கட்டமான 1987 ற்கு முன்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனித உரிமை தொடர்பான திருப்தியற்ற பிரேரணைக்கு இலங்கைக்கு எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு கொண்டுவருவதற்கு இந்த நாட்டின் மிக தொலைவில் அமைந்திருக்கும் ஆஜன்டீனா மூலம் முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இலங்கைக்கு மிக நெருங்கியிருக்கும் அயல்நாடான இந்தியாவின் தேவைக்கேற்பவே அது இடம்பெற்றது. இந்தியா சார்பில் அது மேற்கொள்ளப்பட்டது. 1987ஆம் ஆண்டு போக்லாந்த் பிரச்சினை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை பிரித்தானியாவுக்கு ஆதரவாக வாக்களித்ததை பயன்படுத்தியே இது மேற்கொள்ளப்பட்டது. 1987இலும், 2009 ஆம் ஆண்டும் இடம்பெற்றதானது ஒன்றுக்கொன்று சமாந்தரமான நிகழ்வுகளாகும். இலக்கிடப்பட்ட நாடுகளுக்கிடையே அரசியல் மற்றும் பொருளாதார பலம் பெற்ற நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பொறிமுறையை நெறிப்படுத்தும் ஒருவகையான சம்பிரதாயத்தை கையில் வைத்திருந்தமையினாலாகும். 2006ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவை அமைக்கப்பட்ட பிறகு அரசியல் தேவைகளை நிறைவு செய்வதற்காக மனித உரிமை பொறிமுறையை பயன்படுத்துவதில் மாற்றமொன்றை காண முடியாமை கவலைக்குரிய விடயமாகும். மனித உரிமையை மீறியதற்காக குற்றச்சாட்டுக்கள் பெற்றிருக்கும் யுகத்தில் கூட பல சந்தர்ப்பங்களில் இலங்கையின் சேவையினை அங்கத்தவர் என்றவகையில் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டதை குறிப்பிட வேண்டும்.

1987ஆம் ஆண்டு மனித உரிமை தொடர்பாக இருந்த குற்றச்சாட்டுக்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வது வசந்த கால அமர்வின் இறுதிவரை தாமதிப்பதற்கு இலங்கைக்கு இயலுமானது அர்ப்பணத்தின் பின்னரான போராட்டத்தின் பின்பாகும். ஏற்படும் தாக்கத்தை குறைத்துக்கொள்ளும் வகையில் திருத்தங்களை மேற்கொண்ட பின் அந்த பிரேரணையை நிறைவேற்றுவதற்கு காலஞ்சென்ற எச்.டபிள்யூ. ஜயவர்தன தூதுவர் ஜயந்த தனபால ஆகியோருடன். இலங்கை தூதுக்குழு செயற்பட்டது. எவ்வாறானபோதும் இலங்கைக்கு எதிரான அந்தப் பிரேரணைக்கு சம அனுசரணை வழங்காமல் இருப்பதற்கு இலங்கை பார்த்துக்கொண்டது. ஆனாலும் 2015இல் இலங்கை செயற்பட்டது முற்றும் எதிரான முறையிலாகும். 2012ஆம் ஆண்டு முதல் 3 முறை சமர்ப்பிக்கப்பட்ட மூன்று பிரேரணைகள் நிறைவேற்றப்படாமைக்கு எதிராக செயற்பட்ட இலங்கை ஐந்து பக்கங்களுடனான விடய செயற்பாட்டு 20 பந்திகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அறிமுக பந்திகள் 23 உடனான 30/1 பிரேரணைக்கு சம அனுசரணை வழங்குவது பொருத்தமான விடயமாக இருந்தது. அதன் பின் செயற்படுத்த முடியாத கோரிக்கைகளைக் கொண்ட பிரேரணைகளையே நாடு எதிர்நோக்கியது. அரசியலமைப்பு மாற்றம் மற்றும் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பின்றி வழக்கு விசாரணைக்காக வெளிநாட்டு நீதிபதிகள் பங்குபற்றாத வகையில் அண்மையில் காணப்பட்டுள்ள தீர்மானம் அதற்கு சிறந்த உதாரணமாகும். யுத்த குற்ற விசாரணையின்போது நீதிமன்றங்களை அமைக்க முன் புதிய அரசியல் யாப்பொன்றை நிறைவேற்ற வேண்டும் என்பது மற்றொரு கருத்தாகும். இலங்கை பின்னோக்கிச் செல்வதற்கு முயற்சிப்பது இந்த இரு காரணிகளின் அடிப்படையிலாகும்.

எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கை நன்கு சிந்தித்து புத்திசாதுரியத்துடன் தீர்மானம் எடுக்க வேண்டிய காலமாகும். மேற்கு நாடுகளின் தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்ட இலங்கையின் மனிதாபிமான நிலை தொடர்பான பிரேரணை ஒன்றிற்கு தாமும் ஒரு தரப்பாக இருக்கும் இலங்கை முன்வரும் பேரவை அமர்வின் போது செயற்படும் முறை தொடர்பாக நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கு மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு வாக்குறுதி அளித்திருக்கும் புதிய அரசு தீர்மானங்களுக்கு வரவேண்டிய ஒரு சந்தர்ப்பமாகும். இலங்கை தொடர்பாக 2012 ஆம் ஆண்டு மனித உரிமை ஆணைக்குழுவின் பிரேரணை ஐக்கிய நாடுகளின் பிரேரணையாக அறிமுகப்படுத்தப்படுவதனால் அதன் பிரதான அனுசரணையாளராக கருத வேண்டியது அந்த நாட்டை ஆகும். அமெரிக்காவுடன் ஒன்றுசேர்ந்து பிரதான பணிகளை செய்தது ஐக்கிய இராச்சியம் ஆகும். எனவே தமக்கு தேவையான திசையை நோக்கி இலங்கை ஈடுபடுவதை காண்பது அந்த நாடுகளின் கொள்கை என்பது தெளிவாகும்.

இலங்கையை தமது பிடியிலிருந்து தளர்த்துவது அல்லது விடுவிப்பது ஒருபோதும் அவர்களது தேவையாக இல்லை. தமது அரசியல் எதிர்பார்ப்பினை உச்சமாக அடைவதற்கு இலங்கையின் கழுத்தை இறுக்கி வைப்பதற்கு கொழும்பிலும், ஜெனீவாவிலும், லண்டனிலும், வொஷிங்டனிலும் அவர்கள் உச்ச அதிகாரத்தை பயன்படுத்துவார்கள்.

மேற்கு நாடுகளுக்கு தென்படுகின்ற வகையில் அதுவானது இலங்கையின் நிலைமையை பரிசீலிப்பதற்காக பேரவையின் விசேட அமர்வினை நடத்தும் சந்தர்ப்பத்தை தவிர்ப்பதற்கு இயலுமானபின்பு ஜெனீவாவில் தாம் சமர்ப்பித்த பிரேரணையை நிறைவேற்றுவதன் மூலம் 2009இல் செய்த நடக்கக்கூடாததற்காக இலங்கை செலுத்த வேண்டிய நஷ்ட ஈடானது உண்மையிலேயே கடந்த அரசும் மேற்கு நாடுகளுக்கும் இடையே நிலவிய தொடர்பு மோதல் தன்மையிலிருந்து இரு தரப்பினரும் கலந்துரையாடியிருந்தாலும் அது வெற்றி பெற முடியாது என்பது திடமாகும். சில தரப்பினருடைய நம்பிக்கை மேற்குக்கு எதிரான கருத்து 2009ஆம் ஆண்டு விசேட அமர்வில் நிறைவேற்றிய பிரேரணையின் பின் நடந்த அமர்வுகளில் பின் பாதிப்பான நிலைமையை எதிர்நோக்க வேண்டியிருக்கும். மற்றொரு கருத்தானது 2009 மே மாதத்தில் யுத்த வெற்றி காரணமாக கர்வம் கொண்ட இலங்கை மேற்கின் உத்தரவுகளுக்கு ஒருபோதும் இணங்க மாட்டார்கள் என்பதாகும். எதிர்கால விளைவுகள் தொடர்பாக கவனமின்றி 2015 பிரேரணைக்கு சம அனுசரணை காட்டுவதற்கு இலங்கை அவசரப்பட்டது தேர்தல் வெற்றியின் பின் உருவான அவ்வாறான கர்வம் காரணமாக இருக்கலாம்.

2015இல் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை செயற்படுத்துவதில் இலங்கை மென்மை காட்டியிருப்பதனால் நிறைவேற்றுவதற்கு ஏற்றுக்கொண்ட இணக்கப்பாடுகள் மற்றும் அர்ப்பணங்களை எதிர்காலத்திற்கு ஒத்திப்போடுவதற்கு 30/1 பிரேரணையை கொண்டுவந்த தரப்பினரது அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளவாம் என்ற நம்பிக்கையாகும். இலங்கை சம அனுசரணையோடு தெரிவித்த 7 பிரேரணைகளுக்கு கூடுதலான இணக்கம் தெரிவிக்கப்பட்ட. கூடுதலான பகுதிகளை நிறைவேற்ற முடியுமாக இருந்தால் ஒத்திப்போடும் தீர்மானம் இலகுவாக இருக்கும்.

எவ்வளவு காலத்திற்கு அவ்வாறு ஒத்திபோடுவது என்பதே முதலாவது கேள்வியாகும். அது 12 மாதங்களுக்கு (2018 மார்ச்) வரையிலா அல்லது அதன் பின் வரும் 2018 செப்ரெம்பர் வரையிலா அதாவது 18 மாதங்களா? என்பதாகும். தாமாக ஏற்றுக்கொண்ட இணக்கப்பாடுகள் சகலவற்றையும் நிறைவேற்றுவதற்கு இலங்கைக்கு முடியுமா என்பது அடுத்து எழுப்பப்படும் கேள்வியாகும்.

உண்மை, நீதி, நல்லிணக்கம் போர் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு இடமளிக்காதிருத்தல் போன்றவற்றுக்காக ஆணைக்குழுக்கள் அமைத்தல். காணாமல் போன ஆட்கள் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்ட ஈடுகள் வழங்குவதற்கான அலுவலகத்தை அமைத்தல், இலங்கையின் நீதி பொறிமுறைகளுக்கான பொதுநலவாய நாடுகள், வெளிநாட்டு நீதிபதிகளை பங்குபெற செய்தல், குற்றச் செயல்களுக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் தண்டனை வழங்கும் பட்டியலும் இருக்கின்றது. மக்களது பாதுகாப்பு கட்டளைகள் விமர்சனத்திற்கு உள்ளாவது, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை மீளாய்வுச் செய்து இரத்துச் செய்தல். கடந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடல், அதிகாரத்தை பரவலாக்கி அரசியல் தீர்வுக்கான அரசியலமைப்பு நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற இணக்கப்பாடுகள் அவ்வாறு தாமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளின் மேலும் பட்டியல்கள் உள்ளன.

ஒத்திப்போடுவது ஒரு வருடத்திற்காயின் அடுத்த மார்ச் அமர்வுக்கு முன் கலந்துரையாடி தீர்மானத்திற்கு வர வேண்டும். அப்போது மேற்குறிப்பிட்ட இணக்கப்பாடுகள் மற்றும் அரசினால் இணங்கிய விடயங்கள் 12 மாதத்திற்குள் நிறைவேற்ற முடியுமா? பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது முதல் இப்போது இலங்கையினால் நிறைவேற்றக்கூடியதாக இருக்கின்ற இணக்கப்பாடுகள் என்ன என்பது சம்பந்தமாக வெளிவிவகார அமைச்சுக்கு தற்போது ஒரு புரிந்துணர்வு இருக்க வேண்டும். அரசாங்கம் நம்பிக்கையுடன் பரிசிலிக்க வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. 2 வருடங்களுக்கு முன் சர்வதேசத்திற்கு அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருக்கின்றதா? நிறைவேற்ற முடியுமா? ஒத்திப்போடுவது முடிந்த பின் 3/1 பிரேரணையை முழுமையாக நிறைவேற்ற முடியாது போனால் எதிர்கொள்ள வேண்டிய ஆபத்துக்களை கவனத்தில் கொள்வதும் அரசின் பொறுப்பாகும். இலங்கையின் கடந்த கால செயற்பாடுகள் மற்றும் தற்போது நடைபெறும் நிலைமைகளை கவனத்தில் கொள்ளும் போது குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றிக்கொள்வதற்கு ஏற்றுக்கொள்ளப்படும் பொறுப்புக்கள் எவ்வாறு நிறைவேற்றப்படும் என்பது அனுமானிப்பது அவ்வளவு கஷ்டமானது அல்ல. பேரவைக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமைக்கான காரணத்தை விளக்குவதற்கு இலங்கை தயாராக வேண்டும். இப்போது நாடு மற்றும் மக்கள் உள்ள மனோ நிலையில் 2015இல் இருந்ததை விட முற்றும் மாறுபட்ட நிலையே இருக்கின்றது. அவ்வாறான நிலைலமையின் கீழ் வெளிநாட்டு நீதிபதிகளது பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியுமானாலும், அது தீர்ப்பு வழங்குவதற்கு அல்ல. குற்றங்கள் தொடர்பான விசாரணை போன்ற விடயங்களை விட புதிய அரசியல் யாப்பொன்றை நிறைவேற்றுவது மிக முக்கியமானது. அரசியல் அமைப்பு வகுக்கும் செயற்றிட்டம் இடைநிறுத்தப்பட்டால் என்ன நிலைமை உருவாகும். தென்படுகின்ற வகையில் காணாமல் போனோர் தொடர்பாக அலுவலகம் ஒன்றைக் கூட அமைப்பதில் முன்னேற்றம் காண முடியாத நிலைமை காணப்படுகிறது. உண்மையான நிலை அதுவென்றால் ஒத்திப்போடுவதன் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் நன்மை என்ன. உருவாகியுள்ள நிலைமைகளை தெளிவாகவும், சுருக்கமாகவும் தெளிவுபடுத்தி எதிர்வரும் வருடங்களில் நாம் எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருந்து மீட்சி பெறுவதற்கு முடியுமாக இருந்தால் அது தான் புத்திசாதுரியமான நடவடிக்கையாகும். இந்த நிலைமையின் கீழ் ஒத்திப் போடுவதனை விட அடுத்த 31 பிரேரணை தொடர்பாக மீண்டுமொருமுறை கலந்துரையாடுவது இலங்கைக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறான மாற்றங்கள் தொட்ர்பாக கடந்த கால அனுபவங்கள் இருக்கின்றன. இற்றைக்கு 2 வருடங்களுக்கு முன் மனித உரிமை ஆணைக்குழுவின் 28ஆவது அமர்வில் அது நடைபெற்றது. அவ்வாறான புரிந்துணர்வொன்றுக்கு மீண்டும் வருவதாக இருந்தால் இலங்கையின் பிரச்சினை மார்ச் அமர்வில் விவாதிக்கப்பட மாட்டாது. இலங்கை தொடர்பாக மனித உரிமை ஆணையாளரினால் அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டிய தேவை இருக்காது. அதன் படி இலங்கையின் நிலைமை குறித்து அடுத்த அமர்வில் கலந்துரையாப்படாததோடு அதன் சகல சோர்வான உரைகளையும் ஒத்திப்போடலாம்.

எனினும் 2018 மார்ச் அல்லது செப்ரெம்பரில் நடைபெறும் ஏதாவது ஓர் அமர்வுக்கு முகங்கொடுப்பதற்கு நாம் நம்மை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். இது தொடர்பாக மாற்று வழிகளும் உண்டு. 2018 மார்ச் அல்லது செப்ரெம்பர் வரையிலான 38 அல்லது 39 அமர்வுவரை 31 பிரேரணையை ஒத்திபோடுவதற்கு பிரயோக ரீதியான முறையொன்றின் மூலம் பிரேரணையை நிறைவேற்றுவது (மனித உரிமை பேரவையோடு) பேச்சுவார்த்தை நடத்துவதில் இலங்கைக்குள்ள மற்றொரு நடவடிக்கையாகும். தீர்மானிக்கப்பட்ட மாற்றத்திற்காக அவ்வாறான கலந்துரையாடல் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளுக்கு மேலதிகமாக தமிழ் டயஸ்போராவினால் நெறிப்படுத்தப்படும் அரச சார்பற்ற அமைப்புக்கள் இலங்கை நிலைமை பற்றி விவாதிப்பதற்கு வழி சமையும்.




பாத் பைண்டர் வீடுசட அறிக்கையிலிருந்து தொகுக்கப்பட்டது

# மாகாண மட்டத்தில் மாணவர்களுக்கு சீருடை

## வடிவத்திலும் நிறத்திலும் மாற்றம்

ஒவ்வொரு மாகாணங்களில் நிலவும் தட்ப வெப்பநிலைக்கு ஏற்ப பாடசாலை சீருடைகளின் வடிவத்தையும் அவற்றின் நிறங்களிலும் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

மேலும், கருத்தரிக்கும் ஆசிரியைக ளுக்கும், கர்ப்பகாலத்தில் உடைமாற்றம் கொண்டு வரவேண்டியது அவசிய மாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். குருநாகல் மலியதேவ வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்களின் மன நிலைக்கும் மன சு தந்திரத்துக்கும் ஏற்ற வகையிலும் பாட சாலை சீருடைகள் வடிவமைக்கப்பட வேண்டும். பாடசாலை மாணவர்கள் தங்களுடைய வெண்ணிற ஆடையை அழுக்கு படாமல் சுத்தமாக வைத்திருக்க அவர்கள் தொடர்ந்து முன்னெடுத்துவரும் முயற்சி களையும் செயற்பாடுகளையும் நான் அவதானித்துள்ளேன். பாடசாலை மாணவர்கள், அதுபோன்ற சிக்கல்க ளுக்கும் மனநிலைக்கும் மத்தியில் கல்வி செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது' என்றார்.

இதேவேளை, சில ஆசிரியைகள் கர்ப்ப காலத்தில் புடவையை அணிந்துகொண்டு பாடசாலைக்குச் செ ல்வதால் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதனால் அவ்வாறான ஆசிரியைகள் கர்ப்ப காலத்தில் முறையான ஆடை ஒன்றை தெரிவுசெய்துகொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

## அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம்

*(எம்.எப்.நவாஸ் அட்டாளைச்சேனை)*

மக்களின் காலடியில் நிர்வாகத்தை கொண்டு செல்லும்முகமாக பிரதேச செயலகங்களின் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுமார் 40 மில்லியன் ரூபா நிதியில் கட்டி முடிக்கப்பட்ட அட்டாளைச்சே னை பிரதேச செயலகத்திற்கான புதிய நிர்வாகக் கட்டடம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஐ.எம்.ஹனீபா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புதிய நிர்வாகக் கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார். கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்ச ர்கள், பிரதியமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் என பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

## பாலமுனை கிராம வீதிகள் புனரமைப்பு

*(அஹமட் ஸிறாஜ் இஸ்ஸதீன்)*

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் உட்கட்டமைப்பு ரீதியாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இத்திட்டத்தின் அடிப்படையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாலமுனை பிரதேச த்தில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் மூலம் பாலமுனை 6 கிராம சேவகர் பிரிவுகளிலும் மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருந்துவந்த வீதிகள் மற்றும் வடிகான் என்பன கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு தற்போதைய நிலையில் மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டுள்ளன.

இவ்வேலைத்திட்டங்கள் அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரதேச செயலாளர் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரின் ஆலோசனைக்கமைவாக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஐ.எல்.எம்.இர்பான், எஸ்.எச்.தம்ஜீத், எம்.எஸ்.எம்.அன்சார், எம்.ஜே. எம்.றிஸ்வான் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பில் இவ்வேலைத்திட் டங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது





பேருவளை சீனன்கோட்டை பகுதியில் மலேரியாக் காய்ச்சல் தொடர்பான இரத்தப் பரிசோதனை முகாம் ஒன்று நேற்று நடைபெற்றது. மலேரியா நோய் தடுப்புப்பிரிவினர் இந்த இலவச இரத்தப் பரிசோதனை முகாமை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது. தன்ஸானியா, முஸம்பிக்,மடகஸ்கர் உட்பட மேலும் பலநாடுகளுக்கு இரத்தினக் கல் வியாபார நடவடிக்கைகளுக்காக சென்ற வர்த்தகர்கள் சுமார் 250க்கு மேற்பட்டோர் இதன் போது இரத்தப் பரிசோதனை செய்துகொண்டனர். (படம் பேருவளை நிருபர் பி.எம். முக்தார்.)

## கரைவாகு இலக்கிய சந்தியின் 6ஆவது அமர்வு மாளிகைக்காட்டில்



*(சாய்ந்தமருது யூ.கே. காலித்தீன்)*

கரைவாகு கலை இலக்கியச் சந்தியின் 6ஆவது அமர்வு, மாளிகைக்காடு, அல்-ஷபினா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் அதன் தலைவர் எஸ். ஜனுஸ் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வுக்கு சட்டம் ஒழுங்கு மற்றும் தென்மாகாண அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.எல். எம். சலீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நிகழ்வில் யாழ்ப்பாணத்தை பிறப்பிட மாகவும், லண்டனில் வசிப்பவருமான கவிஞர் மார்க் ஜனார்த்தன் எழுதிய 'ஒரு வேள்வி ஆட்டின் விண்ணப்பம்' கவிதை நூல் அறிமுக விழாவினை அவரது தாயார் திருமதி ஜெகதீஸ்வரன் விஜயலட்சுமி வெளியீட்டு வைக்க நூலுக்கான அறிமுக உரையினை கவிஞர் மன்னார் அமுதனும், நூல் நயத்தினை மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத்தும், கவிஞர் ஏ.எம்.சாஜீத் நூல் ஆய்வினையும் செய்தார்.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழ கத்தின் பேராசிரியர் கவிஞர் றமிஸ் அப்துல்லாஹ்வின் தலைமையில் நடை பெற்ற இரண்டாவது அமர்வாக கரை வாகு இலக்கிய சந்தி பெருமையுடன் வழங்கிய கவிதைகளுக்கான சோலைக் கிளி விருது 2015 விழாவில் முதலாமிட த்தை பெற்றுக்கொண்ட கவிஞர் மன்னார் அமுதன் எழுதிய அன்னா யாவினும் கவிதை நூலுக்கு 15,000 ரூபா பணப் பரிசினையும் விருதினையும் பெற்றுக் கொண்டார்.

மேலும் ஐந்து கவிதைகளுக்கான ஆறுதல் பரிசுகளாக தொடராக நுவரெலியா டிக்கோயா கவிஞர் சு. தவச்செல்வன் எழுதிய டார்வின் பூனைகள், கிண்ணியா கவிஞர் ஏ.கே. முஜாரத் எழுதிய சாத்தான் வழிந்தோடும் சொற்கள் தம்பிலுவில் கவிதாயினி ஜெகா எழுதிய விடை தேடி, பாலமுனை கவிஞர் முவித் எழுதிய உடைந்த கால்கள் மற்றும் ஓட்டமாவடி கவிஞர் றியாஸ் எழுதிய முகவரி இழந்த முச்சந்தி ஆகிய ஐந்து கவிதைகளுக்கான விருதுகளும் பாராட்டுப் பாத்திரமும் மற்றும் போக்கு வரத்து செலவுக்கான கொகை என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டன.

கரைவாகு இலக்கிய சந்தி கவியரங்குக்கு கவிஞர்கள், கலைஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள், கல்வியாளர்கள், பாடசாலை அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் உட்பட தனவந்தர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## வாகன விபத்தினால் போக்குவரத்து ஸ்தம்பிதம்

*(ஹட்டன் க.கிஷாந்தன்)*

திம்புள்ள- பத்தனை பொலிஸ் பிரிவிற் குட்பட்ட அட்டன் நுவரெலியா பிரதான வீதியின் பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு அருகாமையில் இடம்பெற்ற வாகன விபத்தினால் சில மணி நேரம் போக்குவரத்து பாதிப்படைந்திருந்தது.

கொட்டகலை பகுதியிலிருந்து பண்டாரவளை பகுதியை நோக்கி சென்ற மீன் லொறி ஒன்றும் நுவரெலியா பகுதியிலிருந்து கொழும்பு பகுதியை நோக்கி சென்ற கார் ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியது. இவ்விபத்து நேற்று இடம்பெற்றுள்ளதாக திம்புள்ள பத்தனை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் இவ்விபத்தில் இரு வாகனங்க ளிலும் சென்றவர்கள் சிறு காயங்களுக்குள் ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. லொறியில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. எனினும் இவ்விபத்தினால் சில மணி நேரம் போக்குவரத்து பாதிப் படைந்திருந்தது.தற்போது நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் பிரதான வீதிகளை மூடும் அளவிற்கு பனிமூட்டங்கள் பரவியுள்ளன.

இந்த நிலையில் வீதிகளில் வழுக்கும் தன்மையினால் வாகன விபத்துகள் அதிகரிக்க கூடும் எனவும், இதனை தவிர்த்துக் கொள்வதற்கு வாகன சாரதிகள் வாகனங்களை மிகுந்த அவதானத்துடன் செலுத்த வேண்டும் எனவும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

## கல்லொழுவையில் மழை வேண்டி விசேட தொழுகை





*( மினுவாங்கொடை நிருபர் )*

நாட்டின் பல பிரதேசங்களில் கடும் வரட்சி ஏற்பட்டுள்ள நிலையில், மினுவாங்கொடை - கல்லொழுவை முஸ்லிம் கிராமத்திலும் வரட்சி நிலை ஏற்பட்டு, ஆறுகள், வாய்க் கால்கள், கிணறுகள் என்பன வற்றியுள்ளதோடு, மக்கள் குடிப்பதற்குக் கூட நீர் இன்றி தவித்து வருகின்றனர். மினுவாங்கொடை பிரதேச சபை மற்றும் நலன் விரும்பிகள் பலரும் பவுசர்கள் மூலமாக வீடு வீடாகச் சென்று குடிநீர் விநியோகித்து வருகின்றனர்.

இந்நிலையில், கல்லொழுவை ஜும் ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபையினர், கல்லொழுவை கிளை ஜம்-இய்யத்துல் உலமா சபை உறுப்பினர்கள் ஆகியோரது ஏற்பாட்டில், (28) செவ்வாய்க்கிழமை காலை வரட்சி நீங்கி மழை பொழிய வேண்டும் என வேண்டி, தொழுகை மற்றும் விசேட து ஆப் பிரார்த்தனை நிகழ்வுகள் நடத்தப்பட்டன. கல்லொ ழுவை அழுத் மாவத்தை முனாஸ் ஹாஜியார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பெருந்திர ளான மக்கள் கலந்து கொண்டனர். இதில், ஜும் ஆப் பிரசங்கத்தை மௌலவி நூருல் ஹஸன் (பின்னூரி) , து ஆப் பிரார்த்த னையை மௌலவி பாஹிர் தீன் (தீனி ய்யா) அவர்களும் நடத்தி வைத்தனர்.



பறகஹதெனிய தேசிய பாடசாலையின் 10 ஆண்டு கல்வி பயிலும் மாணவர்கள் பாடசாலையும் சமூகமும் என்ற வேலைத் திட்டத்தின் கீழ் ஆரம்ப சிகிச்சை வைத்திய நிலையத்தில் பொதுச் சிரமதானப் பணிகளில் நேற்றுமுன்தினம் ஈடுபட்ட போது அதில் கலந்து கொண்ட மாணவர்கள் ஆசிரியர் வைத்திய அதிகாரி மற்றும் சுகாதார பரிசோதகர் உள்ளிட்டவர்களைப் படங்களில் இங்கு காணலாம். (இக்பால் அலி)

### பெயர் மாற்றம்

இல. 30/7, 5ஆம் ஒழுங்கை, அம்பகஹ பார மஹரகமையைச் சேர்ந்த பாத்திமா ரிஸ்னா ஆகிய நான் கடந்த 2006.05.14ஆம் திகதியிலிருந்து பழைய பெயரான ரதிகா சுயானி விதானகே (தே.அ.இல. 727341609 V) என்ற பெய ருக்கு பதிலாக பாத்திமா ரிஸ்னா என்ற பெயரை மாற்றிக்கொண்டேன் என்றும் இனிவரும் சகல ஆவணங்க ளிலும் அவ்வாறே ஒப்பமிடுவேன் என்றும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிக்கும் அதன் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

- பாத்திமா ரிஸ்னா

கலைவாதி கலீல்

# கலைதரங்கம்

கலை - இலக்கியம் - விமர்சனம்

# ஏய்த்துப் பிழைக்கும் தொழிலா?

சிறுகதை

"வாங்க....
ஜுவாரிம்மாத்தா வாங்க..."

"ரொம்ப நாளைக்குப் பிறகு எங்கட ஊட்டுப்பக்கம் வர நினச்சிக்கி உங்களுக்கு, நான் ஒவ்வொரு நாளும் மகள் பாத்தும்மா கிட்ட செல்லிய அடிக்கடி எங்கட வீட்டுக்கு வந்து போன ஜுவாரிம்மாத்தாவக் காணல்ல என்று."

"ஓம் பீபி தாத்தா! கொஞ்ச நாளா காலில ஒரு வருத்தம். கால நீட்டவும் முடியல. மடக்கவும் முடியல. ஊரில உஸனார் டொக்டரிடம் போய் காட்டினா அவர் மருந்து தந்து கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கச் சொன்னார். எங்களுக்கு ரெஸ்ட் எடுக்க... நினைச்சி பார்க்கவும் முடியல்ல... மகள்ட புள்ளயென்ட வேலையும் வீட்டு வேலையும்...ஒரு நிமிசம் ஓர் இடத்தில் இருக்க கெடக்கியல்ல."

"என்ன செய்ய எங்கட மரிக்கார் நானாட குடும்பம் இந்த முற ஹஜ்ஜுக்குப் போராங்க அவங்களக் கண்டு ஸலாம் சொல்லிட்டு வர வெண்டு வெளிக்கிட்ட நான், போற வழியில ஒங்களையும் பாத்திட்டுப் போகலாம் என்று வந்த நான்."

"நல்ல வேளை நீங்க ஹஜ்ஜுப் பயணத்த நினைவூட்டினது எங்களுக்கு வேண்டியவங்க. கொஞ்சம் நில்லுங்க நானும் வெளிக்கிட்டு வாரன்...."

இருவரும் நடையாகவே மரிக்கார் நானா வீட்டுக்குச் சென்றார்கள். மரிக்கார் நானாவும் மகளும், மகனும் ஹஜ்ஜுக்குப் பயணம் சொல்லிட்டுவர உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தனர். மரிக்கார் நானாவின் மனைவி ஸுமையா, வீட்டில் சுகம் போதாது என்று தங்கிவிட்டார்.

ஜுவாரிம்மாத்தாத்தாவும், பீபி தாத்தாவும், ஸுமையாத்தாத்தாவும் நீண்ட கால நண்பர்கள். ஒன்று கூடியது பெரிய சந்தோசம். மூவரும் நீண்ட நாளைக்குப் பிறகு சந்தித்த... சந்தோசத்தில் பழைய புதிய கதைகள்... ஸுமையா தாத்தா பெரும் வசதி படைத்தவ! "நீங்க ரெண்டு பேரும் இன்னும் காலம் தாழ்த்தாம அடுத்த வருடத்திலயாவது ஹஜ்ஜுக்குப் போக ரெடியாவுங்க..."

"அல்லாஹ் நாடியிருந்தால் நடக்கும். எங்கட மாப்புள்ளமாருக்கு பெரிய வசதிகள் இல்ல, நாளாந்த கூலித் தொழில் தானே..."

"இப்ப என்ன ஹஜ்ஜி செய்ய ஒருத்தருக்கு ஏஜென்சி, ஆறு லெட்சம் எண்டு கேட்குது. குறைந்தது ஒரு



உம்ராவாகிலும் செய்ய அதுவும் லேசா, அதுவும் சொச்சம் அல்லவே லட்சம் என்றும் அதற்கும் மேல் என்று ரேடியோலயும், பேப்பரிலயும் விளம்பரம் போடினம் எஜென்சிமார்" என்றா பீபி தாத்தா.

"உண்மைதான் அல்லாட கடமையை நிறைவேற்ற செல்லும் அப்பாவி மக்களுக்கிட்ட பொளைக்கப் பாக்கிராங்க ஏஜென்சிமார். அல்லாதான் காப்பாத்த வேண்டும் அவங்கள. முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் மற்றும் அரசாங்கம் எத்தனை சட்டங்களைப் போட்டாலும் குறைந்த செலவில கொண்டுபோக எந்த ஏஜென்சியும் இணக்கமில்ல. அவர்களிட வரிசப் பொளப்பு அதுதானே" என்று பீபி தாத்தா முடிக்க அத்தனையையும் ஆமோதித்து ஜுவாரிம்மாதாத்தா...

ஒருபடி மேலே சென்று "கடந்த மாதம் எங்கட ஊட்டுக்குப் பக்கத்தில நாலு...ஐந்து..பேர் உம்ராவுக்குப் போனாங்க... அவங்ககிட்ட பத்து நாள் பயணம், நல்ல ஹோட்டல்ல தங்குவசதி ஹரத்துகிட்ட, இலங்கை ருசியான உணவு மூன்று நேரமும், பத்து மணிக்கும் அஸர் தொழுகைக்குபின்பும் சோட் ஈட்ஸ் உடனே தேனீர் என்று இல்லாத பொல்லாததையெல்லாம் சொல்லி ஓர் இலட்சத்து பத்தாயிரம் வாங்கி மூன்று நாள் நாலு நாள் வசதியான் ஹோட்டலும்... நாளைக்கு நாங்க வேறு இடத்துக்குப் போறோம் என்று தூர இடத்தில வசதிகுறைவான ஹோட்டலும், பத்து நாள் பயணத்த ஏழு நாளோடு நிறைவு செய்து நாளைக்கு நாங்க வெளிக்கிட வேண்டும் என்று சொல்லி ஏமாத்திய ஏஜென்சிகளும் இருக்கினம் என்று கேள்விப்படும் போது..."

"ஊழல்... மோசடி... ஏமாத்து... அல்லாஹ்வின் புனிதத்தலத்திலும் நடைபெறும் போது யாரை நம்புவது... கஃபாவையும், ரஸூல்(ஸல்) அவர்களின் அடக்கஸ்தலத்தையும் கண்டு கொண்ட பாக்கியமும் தவாப் செய்தும் உம்ரா செய்தவர்களின் மன நிறைவுக்கும்... ஏஜென்சிகளை அல்லாஹ்தான் காப்பாத்த வேணும்" என்று ஜுவாரிம்மா தாத்தா சொல்லி முடிக்க வெளியே சென்றிருந்த மரிக்கார் நானாவும், மகளும், மகனும் வந்து சேர்ந்தனர்.

- **ஏ.ஸீ.எம். ஜிப்ரி**
**மித்துவையூர்**

# தரிப்பு

**வன் வன் நைன்**

ஆகா அற்புதமான...
இலக்கம்!
தொ(ல்)லை பேசி
இலக்கம்!

இதனைச் சுழற்றினால் (அல்லது அழுத்தினால்) அராஜகம் அழியும்; அட்டகாசம் ஒழியும்; அடாவடித்தனம் மறையும்; பாலியல் கொடுமைகள், பச்சிளம் பாலகரின் மீதான துஷ்பிரயோகங்கள், பஸ்களிலும் கோச்சுகளிலும் நடைபாதைகளிலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இத்தகைய நபுஞ்சகங்க ளெல்லாம் நாட்டைவிட்டே பறந்தோடி காடுகளிலும் 'கப்ரு'களிலும் தஞ்சமடையும்...

இப்படி எவராவது எதிர்பார்த்தால்...

ஏமாற்றமடைவார்களா? எக்காளமிடுவார்களா? மகிழ்ச்சியடைவார்களா? மன நிம்மதி கொள்வார்களா?

**119**

நான் ஓர் ஊடகவியலாளன் என்ற வகையிலே, 119 என்ற இந்த இலக்கத்தை அரசு வழங்கியதையிட்டு ஓரளவு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மகிழ்ச்சி கூட 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூசக்கரை' என்ற பழிமொழி போன்றதுதான். பரவாயில்லை...

சரி போகட்டும்... 119, என்னதான் சாதிக்கப் போகின்றது என்று பார்ப்போம்.

புங்குடுதீவு, பாடசாலை மாணவி வித்யா காமுகக் காடையர்கள் பலரால், மரமொன்றில் கட்டிவைக்கப்பட்டு, கதறக் கதறக் கற்பழிக்கப்பட்டு, அரக்கத்தனமான முறையில் கொன்றொழிக்கப்பட்டு, இரண்டு வருடங்கள் கரைந்து கொண்டிருக்கின்றன. இன்னும் நீதி நிலைநாட்டப்படவில்லை. இவ்வாறே பிஞ்சுச் சிறுமிகளும் பச்சிளம் பாலகிகளும், பால் மணம்மாறாப் பாலகர்களும் தனது மாமா, மச்சான், அண்ணன், தம்பி போன்ற (ஏன் அப்பனும் கூட) காமுகக் காடையர்களால் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு எவ்வித தீர்க்கமான தீர்ப்பும் இன்றி நிற்கின்ற நிலையில், இந்த 119 என்ற இலக்கம் எதனைச் சாதிக்கப் போகிறதோ.

119 என்பது சூ மந்திரக்காளியோ மாயக்காளியோ அல்ல!(உள்ளது உள்ளபடி ஒழிக்காமல் காட்டும் மாயக் கண்ணாடியே அந்தக் கள்ளன் எங்கிருக்கிறான் என்பதைக் காட்டு பார்ப்போம் - பழங்கால மாயாஜாலப் படங்களில் வரும் கண்ணாடிபோன்று)

ஓடிக் கொண்டிருக்கும் பஸ்ஸொன்றில் அல்லது புகையிரத்தில் ஓர் இளம் பெண் மீது காமுகக் காடையர்கள் சில்மிஷத்தில் ஈடுபடுகின்றனர். அவர் உடனடியாக தனது அலைபேசியை (இருந்தால்) எடுத்து 119 க்கு டயல் செய்வார். எதிர் முனையிலிருந்தவர்கள் அப்பெண்ணின் வேண்டுதலை செவிமடுத்து, குறிப்பிட்ட இடத்துக்கு வருவதற்குள் பஸ் வேறிடம் சென்றுவிடும். (பஸ்ஸில் பல காடையர்களால் கெடுக்கப்பட்டு ஈனத்தனமாகக் கொலை செய்யப்பட்ட டில்லி மருத்துவக் கல்லூரி மாணவியின் கதையறியாததா என்ன?)

பலர் ஒரே நேரத்தில் 119 ஐ அழுத்தினால் என்ன நிலை...

அந்த நாட்களில் புகைவண்டிகளில் பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இன்று ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை!

சிறுவர் துஷ்பிரயோகம் இலங்கையடங்கிலும் பரவலாக இடம்பெறத்தான் செய்கின்றன. தெரிந்தவை 100 - தெரியாதவை 1000

இதுதான் யதார்த்தம்!

எது எப்படியிருந்த போதிலும் அரசின் அதிரடி நடவடிக்கையான இந்த 119 ஐ மனப்பூர்வமாக வரவேற்கின்றது. 'தரிப்பு'

# ஆய்வாளர்களின் கவனத்திற்கு...

ஆய்வாளர்கள் கவனத்திற்கு... என்ற இந்தக் தொடர்பத்தியில் இதுவரை, ஆய்வு செய்யப்பட வேண்டிய, சிறுகதைகள், கவிதைகள் எழுதியோரின் பெயர்ப்பட்டியலை என்னால் முடிந்தவரை பூரணப்படுத்தியிருந்தேன். இப்பத்தியின் நோக்கம் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். அதாவது ஆக்க இலக்கியம் பற்றி ஆய்வுகள் செய்கின்ற சில பேராசிரியர்கள், கலாநிதிகள், கல்விமான்கள் மற்றும் சில தனிப்பட்ட ஆய்வாளர்கள் சதாகாலமும் கவிதையென்றால் ஒரு நுஃமான், ஒரு சோலைக்கிளி, சிறுகதையென்றால் ஓர் ஓட்டமாவடி அறபாத், ஒரு எஸ்.எல். எம். ஹனீபா என்று (இவர்கள் சிறந்த படைப்பாளிகள் என்பது வேறு விடயம்) 'கிளிப்பிள்ளை' பாடம் நடத்திக் கொண்டிருந்ததைக் கண்டு எரிச்சலடைந்தமையினால் இந்த பெயர்ப்பட்டியலை மிகச் சிரமப்பட்டுத் தயாரித்தேன். அது என் கட்டாயக் கடமையும் கூட.

இதனை ஏற்றுக் கொள்வதும், தள்ளுவதும் ஆய்வாளர்களின் விருப்பத்தைப் பொறுத்தது. ஆனால் நான் பட்டியலிட்டவர்களின் இரண்டொரு ஆக்கங்களை யாவது தேடிப்படித்துப் பார்க்காமல் ஆய்வறிஞர்கள், ஆய்வுகளை மேற்கொள்வது இலக்கிய உலகுக்கு இழைக்கப்படும் துரோகம் என்றே நான் கருதுகிறேன்.

இன்றைய எழுத்தாளர் பட்டியல், நாவல் இலக்கியம் படைதளித்தோரைப் பற்றியதாகும்.

**அறிஞர் சித்திலெப்பை (அசன்பேயின் கதை - இலங்கையின் முதல் நாவல்)**

**இளங்கீரன் (சுபைர்) இங்கிருந்து எங்கே, நீதியே நீ கேள் முதலிய சுமார் 25 நாவல்கள்**

**அ.ஸ. அப்துஸ்ஸமது**

**திக்குவல்லைக் கமால்**

**எஸ். ஐ. நாகூர் கனி(அமுதன்)**

**மாத்தளை பர்வீன் (25 தொடர் நாவல்கள்)**

**ஹஸீனா வஹாப்**

**ஜுனைதா ஷெரீப் (கே. எம்.எம். ஷெரீப்)**

**வை. அஹமது**

**இர்பானா ஜப்பார்**

**பெரோஸா ஹுசைன்**

**நயீமா சித்தீக்**

**ஜரீனா முஸ்தபா (பல நாவல்கள்)**

**ஸனீரா காலிதீன்**

**கெகிராவ ஸஹானா**

**லரீனா ஹக்**

**சுலைமா ஸமீ**

**இன்ஸிரா ஸமீ**

**தீரன் நௌஸாத்**

**எம்.எச்.எம். ஷம்ஸ்**

**கலைவாதி கலீல் (தொடர் நாவல் - தினகரன்)**

**ஒலுவில் அமுதன்**

**கலையமுதன் இக்பால் (ஒரு நாவல்)**

**ப. ஆப்தீன்(ஒரு நாவல்)**

**(இன்னும் வரும்)**

# அவலங்களுக்கு விடிவு எப்போ...

ஓ மரிச்சுக்கட்டி...!
புதுப் பெண் போல் இருந்த நீ
இப்படிக் களையிழந்து போனாயே!
உன் பூமிப்புத்திரர்களையும்
அவர்கள் மூலமாய் நீ பெற்ற
பொலிவையும் வளங்களையும்
இழந்ததால் எழுந்த
கவலையா!

வேறென்ன நீ மாத்திரமல்ல
மனிதத்தன்மையுள்ள அனைவரையுமே
கலங்கவும் கவலையுறவும் வைத்த
நிகழ்வு தானே இது!

நீ மாத்திரமல்ல உன் சகாக்களான
பாலைக்குழி, கரடிக்குழி, முள்ளிக்குளம்
இன்னும் பல - இவையெல்லாம்
மனித நேயமுள்ளவர்களைக்
கண்ணீர் வடிக்கத்தான் செய்கின்றன.

எமது துரதிஷ்டம்
பேய்த் தலையாய்க் காட்சியளிக்கும்
உன் பொலிவிழந்த பூமியைத்தான்
காணும் வாய்ப்புப் பெற்றோம்
கால் நூற்றாண்டுக்கு முன்
என்ன எழிலாய் இருந்திருப்பாய்!
இத்தனைக்கும் காரணமான இந்த
அராஜகப் புலிகள் ஏன்தான்
மனிதராய்ப் பிறந்தார்களோ?
மனித குலத்துக்கே சாபக் கேடு!
போதாக்குறைக்கு
இனத் துவேசிகளுமல்லவா
இதில் மூக்கை நுழைக்கிறார்கள்

எரிகிற வீட்டில் பிடுங்கியது
இலாபம் என்று
பெரும்பான்மை இனம் என்ற இறுமாப்பு
அவர்களின் புத்தியை
மழுங்கடித்துவிட்டது!

ஆமாம்
இருப்பிடத்தை இழந்த அந்த
அப்பாவிகளுக்கு
காட்டுவளத்தை அழிப்பதாய்
அவப் பெயர்!
வெந்த புண்ணில்
வேல் பாய்ச்சுவதல்லாமல்
வேறென்ன இது!

புலிகளின்
அராஜகத்துக்கு இலக்கான
அப்பாவிகளுக்கு உதவுவதை விடுத்து
மேலும் வதைப்பது தான்
இந்த 'சிங்க' இனவாதிகளின்
கொள்கையா?
பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் மீது
எத்தகைய வீண்பழி
இத்தனைக்குமிடையில்
நல்லரசென்று கூறப்படும் நமது அரசு
மனம் வைத்தால் - இந்த
அப்பாவிகளின் அவலம் தீரும்

அதன் பலனாய்
இறையருளால் நாடு செழிக்கும்
நடக்குமா?

இருகரமேந்திப் பிராத்திக்கத்தான்
தம்மால் முடியும்
அப்பாவிகளின் அவலம் நீங்கி
அவர்தம் உரிமைகளுடன்
நிம்மதியாய் வாழ
இளையருள் கிட்டட்டும்!

**★ திருமதி. ஜானா**
**கல்பொக்கை, வெலிகாமம்**

**இளம் கவிஞர் அறிமுகம்**

# யார்? இந்த வட்ஸ்அப் (WhatsApp)

கதவோரம்
கதிரவனின் கதிராக
கருமம் செய்ய வந்தவனே!
யார் நீ?

நல்லவன் போல் நடிக்கிறாயா? -
இல்லை
நட்டம் செய்ய வந்தவனா?
யார் நீ?

நாளாந்தம்
தோன்றும்
நாளாந்தமாய்
இனிக்கும் அமிர்தமாக
தோன்றுபவனே!
யார் நீ?

தொலைந்த உறவை
தொக்கி நிற்கவும்
தொண்டு செய்யவும் வந்தவனா?
யார் நீ?

விடியலுக்கு முன்
விழியோரமாய்நின்று
விழித்திடச் செய்தவனே!
யார் நீ?

புன்னகையாகவும்
புதுமையாகவும்
பூவாகப் பூத்து
பழியாக்க நினைத்தவனே!
யார் நீ?

இளம் சிட்டுக்களின்
இங்கிதமாகவும்
இசையாகவும்
இனித்தவனே!
யார் நீ?



சிறியோருடனும்
பெரியோருடனும்
பேதமின்றியே
போதை ஏறுபனே!
யார் நீ?

தவறுகள் அதிகம்
உன்னில் - மன்னிக்கவும்
யோசிக்கவும் அற்பத்தனங்கள்
அதிகம் - என்னில்

வழி தவறிச் செல்வோருக்குதான் - நீ
முன் நிற்கின்றாய்
வழி கெட்ட சாதனமாய்

அறிவு உள்ளவனுக்கு - நீ
திகழ்கின்றாய் அறிவாளியாக!
ஆம் ஆம்! நீதான் அந்த
'வட்ஸ்அப்'!

**- மிஸ்னா மிர்ஷாத்,**
**இல 6/6, வில்பொலை - அரனாயக்க**





# ஓர் ஏழைத்தாயின் உள்ளக் குமுறல்

கே.சுபானி

மேக மூட்டம் அந்த மலைமுகட்டை முழுவதுமாக மூடி, பனி மெல்லிய சாரலாக பெய்துகொண்டிருக்கிறது... உறையவைக்கும் குளிர் இழுத்துப் போர்த்திக்கொள் என எச்சரிக்கிறது... இதனிடையே அந்த மலை அடிவாரத்தை அடைந்துவிட்டோம். அருகில் தென்பட்டது ஆங்கிலேயரின் ஆட்சியை நினைவுகூரத்தக்கதான லயன் வீட்டு தொகுதி. கூரைக்கு வேயப்பட்டுள்ள தகரங்கள் காற்றுக்கு அடித்துச் செல்லாமலிருப்பதற்காக ஆங்காங்கே சில டயர்கள், கற்கள். அதுமட்டுமன்றி கூரைக்குமேல் பசுமை புரட்சியா? என்று கேட்குமளவுக்கு சிறு சிறு மண்மூடைகளில் புற்கள் முளைத்து பரவி விட்டிருக்கின்றன. அதுமட்டுமன்றி மழைநீர் வீட்டுக்கு வழிந்து செல்லாதவகையில் ஆங்காங்கே பொலித்தீன் உறைகளால் மூடப்பட்டு பரந்து செல்லாத வகையில் கற்கள் வைக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு வீட்டுக் கூரையின் மேற்புறம் புகை கிளம்பிக்கொண்டிருக்கிறது.... மெதுவாக இந்த வீட்டை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.

தேநீரின் மணம் மூக்கை துளைக்கிறது... ஜெயராணி தன் மூன்று குழந்தைகளுக்குமான தேநீரை அவரவரின் கோப்பைகளில் ஊற்றி வைத்துவிட்டு அவர்களை அழைக்கிறாள்... நாமும் உள்ளே நுழைகிறோம்... இறுகிய முகத்தில் ஒரு புன்சிரிப்புடன் எம்மை வரவேற்றுவிட்டு அந்த தாய் தனது கைகளை பற்றி எரியும் விறகுகளை சற்றே தட்டி தீயை அதிகரித்து தனது கைகளை நெருப்பின் அருகே அகல விரித்து குளிர் காய்ந்தவாறே எம்முடன் உரையாட முற்படுகிறார்... இதற்கிடையே தாயின் குரலை செவிமடுத்த குழந்தைகள் ஓடி வந்து தேநீர் கோப்பைகளை கையிலெடுத்தவாறு தாயின் முகத்தை பார்க்கின்றனர். அந்த தாயின் கண்களோ வெறுமையான சீனி வைத்திருக்கும் போத்தலை நோக்குகின்றது. அந்த குழந்தைகளோ தாயின் பார்வையின் அர்த்தத்தை புரிந்துகொண்டவர்களாக அவ்விடத்தை விட்டு நகர்கின்றனர். இதனிடையே புன்னகை மாறாத அந்த தாய் எம்முடன் உரையாட விளைகிறார்....

கிழமைக்கு மூன்று நாளே வேலை கிடைக்கிறது எனக் கூறும் ஜெயராணி, மாதத்துக்கு 27 நாட்கள் வேலை செய்து 10 ஆயிரம் சம்பளம் எடுத்தாலே ஒருவேளை ஒழுங்கான உணவு சாப்பிட முடிகிறது எனவும் இதில் தற்போது கிடைக்கும் கிழமைக்கு மூன்று நாட்கள் வேலையை வைத்து என்ன செய்வது எனவும் அங்கலாய்க்கிறார். ''தினமும் கால் வயிறு, அரை வயிறு உணவென்றே காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பளம் கூட்டித்தருகிறேன் என்று சொல்லிச் சொல்லியே இன்னமும் கூட்டிதந்த பாடில்லை, கடந்த வருடம் நாங்களும் சம்பள போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம் இருந்தும் என்ன பயன். நாங்கள் தான் திண்டாடிக்கொண்டிருக்கிறோம்.''

> **"தினமும் கால் வயிறு, அரை வயிறு உணவென்றே காலம் ஓடிக்கொண்டிருக்கிறது. தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பளம் கூட்டித்தருகிறேன் என்று சொல்லிச் சொல்லியே இன்னமும் கூட்டிதந்த பாடில்லை, கடந்த வருடம் நாங்களும் சம்பள போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம் இருந்தும் என்ன பயன். நாங்கள் தான் திண்டாடிக் கொண்டிருக்கிறோம்"**

வாழ்க்கை பெரும் போராட்டமாகவே நகர்கின்றதாக ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார் ஜெயராணி. வேலையில்லாத நாட்களில் சிலவேளை சிங்கள கிராமத்திலிருந்து (தேயிலை தோட்டத்தை அண்மித்துள்ள சிங்கள கிராமம்) வீட்டு வேலைக்கு அழைப்பார்கள் எனக்குறிப்பிடும் அவர் அதில் கிடைக்கும் 200 ரூபா வைத்து அன்றைய பொழுது ஓடிவிடும் எனச் சுட்டிக்காட்டுகின்றார். எனினும், அடுத்த நாள் என்ன செய்வதென்று நினைத்தாலே தலையைப் பிய்த்துகொள்வதென்றிருக்கும் எனப்புலம்புகிறார்.

''இன்றும்கூட எனக்கும் என்குழந்தைகளுக்கும் அவித்த பலாக்காயே மதிய உணவு..'' என்று கூறியவாறு தரையை நோக்கி தலைசாய்த்து விம்முகிறார் அந்த தாய்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காய் பாடுபடும் ஒரு இளந்தாயின் கண்ணீர் கண்டு இதயம் ரணமாகின்றது.

சில நிமிடங்களில் தன்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டு உரையாட ஆரம்பிக்கிறார்.

இப்போது தம்மைப் போன்றவர்களை நம்பி கடைகளில் கூட கடன் கொடுக்க தயங்குகின்றனர் எனக் கூறும் ஜெயராணி அவ்வப்போது சில பொருட்களை தந்தாலும் கூட பலவற்றை இல்லை என்று மறுக்கின்றனர் என வலியைக் கொட்டுகிறார்.

''நான் எனது கணவனை விட்டு பிரிந்து தனித்தே இருக்கிறேன். எனக்கு மூன்று பிள்ளைகள் மூவரும் பாடசாலைக்கு செல்கின்றனர். மாத சம்பளம் எடுத்தாலும் சாப்பாட்டுக்கு, பிள்ளைகளின் படிப்புக்கு, மருந்து செலவுக்கு ஒதுக்கும்போதே எனது சம்பளத்தை தாண்டி செலவு அதிகரிக்கிறது. பொங்கலுக்கு கூட என் குழந்தைகளுக்கு ஒழுங்கான ஆடை வாங்கிக்கொடுக்க முடியவில்லை'' என்றவரின் முகத்தில் சோக மேகம் சூழ்ந்து கொண்டது.

7ஆம் தரம் வரைக்குமே பாடசாலைக்குச் சென்றதாக கூறும் அவர் தனது குடும்பத்தின் வறுமையால் மேற்கொண்டு என்னால் படிக்கமுடியவில்லை என்கிறார். தனக்கு தற்போது 32 வயதாகின்றதெனவும் திருமணம் முடித்ததிலிருந்து தோட்ட வேலைக்கு சென்றுவருவதாகவும் கூறுகின்றார்..

'என் கையை பாருங்கள்'.. என்று காட்டவே அவரின் இரு கைகளின் ஆட்காட்டி விரல்கள் மற்றும் ஏனைய இரு விரல்களிலும் வெடிப்புக்கள் ஏற்பட்டு அதிலிருந்து இரத்தத்துடன் கலந்த சீழ் வெளியேறியிருப்பதை காணக்கூடியதாக இருந்தது. அதை கண்டதும் உடல் புல்லரித்தது... ''எனக்குத் தான் படிக்க முடியாமல் போய்விட்டது எனது பிள்ளைகளாவது படித்து நல்ல உத்தியோகத்துக்கு போகவேண்டும் இதற்காகவே இந்த போராட்டம்'' என்று கூறியவர் பேசிக்கொண்டிருந்ததில் நேரம் போன தெரியவில்லை. இருட்டி விட்டது விளக்கேற்றவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, அடுப்பங்கரையிலிருந்த மண்ணெண்ணெய் விளக்கை எடுத்துக்கொண்டு வீட்டின் உட்புற அறைக்குச் செல்கிறார்.

இந்த தாய்க்கு எவ்வாறு ஆறுதல் சொல்வதென்று தெரியாமலேயே நாமும் விடைபெற்றோம்.

இது பதுளை, நமுனுகுல பகுதியிலுள்ள வெவேகலை என்னும் பின்தங்கிய சிறு கிராம தாயின் சோக கதை, இது வெறும் கதையல்ல, நம் தாய்நாட்டின் பொருளாதார விடிவுக்காய் போராடும் ஒரு ஏழைத் தாயின் நிஜக் கதை.


மலையகம் தோறும் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்ட சம்பளம் கோரிய வேலை நிறுத்தப்போராட்டம் இன்றும் ஒரு தீர்க்கமான முடிவு எட்டப் படாத நிலையில் ஜெயராணி போன்றவர்களின் எதிர்காலம் கேள்விகுறிக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

இந்த பிரச்சினையால் மேற்கூறிய தாயைப் போன்று எத்தனையோ மலையக தாய்மார்கள் ஏன் குடும்பங்களின் பிரச்சினைகள் வெளிவராமல் மறைந்துள்ளன என்பதே பெரும் சோகம்.!

(சோக மேகங்களின் சுவடுகள் தொடரும்...)



ஜெயராணி







---

# சட்ட ஆட்சி தொடர்பான சட்டவியல் வழுக்கள் (தவறுகள்)

சூரி ரத்னபால

(நேற்றைய தொடர்ச்சி...)


சிறந்த முறையில் சட்ட ஆட்சியின் சரிவு தொடர்பாக பொதுமக்கள் தெரிவின் சிக்கனத்தன்மைப் பிரயோகத்தினடிப்படையில் முழுமையாகத் தெளிவுபடுத்த முடியாது. அரசியல் கலாசாரத்தில் புதைந்துள்ள சிறந்த சட்ட ஆட்சியும் வெளிப்படையாக அதிகாரமற்றது என மறுக்கப்படலாம். அது கருத்தியலாகப் பேணப்பட வேண்டியுள்ளதாயிருப்பினும் தேர்தல் செயன்முறை மூலம் உருவாகும் புதிய மாநிலத்தை உள்ளடக்கும் வகையில் மீளவடிவமைக்கப்பட்டது. சட்டம் இயற்றுபவரின் (பாராளுமன்ற உறுப்பினரின்) விருப்பத்திற்கிணங்க சகல சட்டங்களையும் வரைவிலக்கணப்படுத்துவது தொடர்பில் சட்ட உடன்பாட்டாளர்களின் குறைப்புச் செய்யப்பட்ட சட்டவியல் வடிவில் இந்த மீள் உருவாக்க வழிமுறைகளின் பகுதியாக ஏற்கனவே உள்ளது. Hobbes, Bentham மற்றும் Austin ஆகியோர் இந்த கொள்கையின் பிரதான நூலாசிரியர்களாக இருப்பினும், நூற்றாண்டு அதன் செல்வாக்குமிக்க உடன்பாட்டாளர்களான Han kelsen, H.L.A.Hart, Joseph Raz மற்றும் அவர்களைப் பின்தொடருபவர்களையும் உருவாக்கியுள்ளது. இந்த கட்டுரையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் சட்ட ஆட்சி என்பது பழங்கால வழக்கிலிருந்து புரிந்து கொள்ளப்பட்டவாறான சட்ட ஆட்சியாகும். அதாவது கட்டளைகளின் ஆட்சிக்கு எதிராக நடத்தையின் பொது நிலைவரங்களாகும். சட்டம் பற்றிய இக்கண்ணோட்டத்தில், கட்டளைகள் கருத்தளவில் மட்டும் சட்டப்படி அமைந்ததாகவும், அவை சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளன. இந்த வேறுபாடு உடன்பாட்டாளர்களின் சிந்தனையைக் கலைத்துவிட்டது. ஏதேனும் 'கட்டாயம்' எனும் முன்மொழிவு அதிகாரிகள் அதை பயனுறுதிமிக்க முறையில் அமுல்படுத்துவதற்கு வழிவகுத்து சட்டமாக கருதப்படவுள்ளது. அரசியல் உண்மைத்தன்மையில் (Grundnorm) இறுதியாகப் பொதிந்துள்ள நியமங்களின் படிநிலை அமைப்பில் (அதிகார வரிசையில்) அவை அங்கீகரிக்கப்பட்டிருப்பின், Kelsen என்பவரின் தூய சட்டக்கொள்கையின் நியம உள்ளடக்க மற்ற கட்டளைகளும் சட்ட நியமங்களாகக் கருதப்படும்.

பாராளுமன்றம் மற்றும் நீதிமன்றுகள் உட்பட அதிகாரிகளினால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சகல நடவடிக்கைகளும் சட்டமாக கருதப்படுவதற்கு உடன்பாட்டாளர்களின் ஒற்றுமையே மூல காரணமாகும். (Hayek 1976 883, 2:50) சட்டம் எனக் கருதப்படுவதற்கு உபகரணமொன்று கொண்டிருக்கவேண்டிய பண்புகள் யாவை? எனும் வினாவிற்கு கூறியதைக் கூறுதல் எனும் பதிலுக்கு இணங்க சட்டம் என்பது அதிகாரிகளின் சட்டமாக நடைமுறைப்படுத்துவதாகும். மாறாக, சட்டம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றை வேறாக்குதல் பற்றிய சாத்திக்கூறு தொடர்பாக Hart என்பவருடனான அவரது பிரபல விவாதங்களின் போது, சட்டத்தை ஆக்குவது தொடர்பில் தோல்வியைத்தழுவும் எட்டு வழிமுறைகள் இருப்பதாகவும் பின்வரும் எட்டு பண்புகளுடன் சட்டவாக்கத்தை வழங்கத் தவறியமையைத் தொடர்புபடுத்துவதாகவும் Lon Fuller என்பவர் அவதானித்தார். அப்பண்புகளாவன: பொதுத்தன்மை, எதிர்காலவாய்ப்பு, வெளிப்படுத்துகை, தெளிவுத்தன்மை, ஏகவினத்தன்மை (சட்டத்தில் மற்றும் சட்டங்களுக்கிடையில்) மாறாத தன்மை (சட்ட மாற்றங்கள் அடிக்கடி நிகழாமை), இணங்கியொழுகுவற்கான சாத்தியக்கூறு, பிரகடனப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றிற்கிடையிலான பொருத்தப்பாடு (1964 அத்தியாயம் - 2) இத்தகைய பண்புகள் மரபு ரீதியான சட்டத்திற்கு அதன் அந்தஸ்தையும் சட்ட ஆட்சிக்கு அதன் பொருளையும் வழங்கியிருந்தன. சட்ட அறிவுறுத்தல்களின் கீழ் சகல அரசாங்கத் தலையீடுகளினதும் வகைகளை வகுதியாக்கும் போது கிடைக்கப்பெற்ற பெறுபேறு யாதெனில் சட்டத்தின் கீழ் உள்ள அரசாங்கத்தின் அடிப்படையை அழிக்க வேண்டியிருந்தது - குறிப்பாக, பொதுச்சட்டங்களை உருவாக்குவதில் பாராளுமன்றம் மற்றும் நீதிமன்றுகள் ஆகியவற்றுக்கான வரையறை மற்றும் அத்தகைய பொதுச் சட்டங்களுக்கான நிறைவேற்றுச் செயல்களின் சார்புறும் தன்மை ஆகியனவாகும். சட்டம் பற்றிய புதிய எண்ணக்கருவாக்கத்தினால் கருதப்படுவது யாதெனில், சட்டவாக்கத் தத்துவத்தைக் கொண்டிருக்கும் எவரேனும் நாட்டின் பொதுச் சட்டத்தை மாற்றுவதற்கான அதிகாரத்தை மட்டும் கொண்டிராது குறித்த சந்தர்ப்பத்திற்கான சட்டத்தை தீர்மானிக்கும் அதிகாரத்தையும் கொண்டிருக்கிறது. இந்த அபிப்பிராயத்திற்கு இணங்க, சட்டம் இயற்றுபவர் அல்லது அவரின் பிரதிநிதி உடன்படிக்கைகளை இரத்துச் செய்து அல்லது மாற்றங்களை ஏற்படுத்துதல், உடைமைகளைப் பறித்தெடுத்தல், விசேட நன்மைகளை வழங்குதல், தனிநபர்கள் அல்லது குழுக்கள் மீது பதவி இழப்பை அமுல்படுத்துதல் மற்றும் பொதுவாக அதன் அமுல்படுத்துகையின் போது ஒவ்வொரு விடயத்திற்கும் சட்டத்தை உருவாக்குதல் ஆகியவற்றை மேற்கொள்வார். ஆட்சியாளரின் பயனுறுதிமிக்க விருப்பமாக சட்டம் உள்ள போது அதன்கீழ் இறையாண்மையின் மாதிரியுருவின் சார்பாக உள்ள தத்துவங்களை (அதிகாரங்களை) வேறுபடுத்துவதற்குள்ள மரபுரீதியான அரசியலமைப்பு மாதிரியுருவை இக்கொள்கை மறுத்துரைக்கிறது. இந்த நிர்மாணம் பிரித்தானிய அரசியலமைப்புடன் இணங்கிக் காணப்படுவதாகக் கருதப்பட்டபோதிலும் அதன் பிரதான இயல்புகளின் தவறான மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பிரித்தானிய அரசியலமைப்பு மிகவும் மரபு வழக்கில் உள்ளதோடு இங்கிலாந்தின் நீதிமன்றங்கள் பொதுச்சட்டங்களின் பெறுமதிமிக்க தத்துவங்களை மீறுவது தொடர்பில் பாராளுமன்றச் சட்டங்களை செல்லுபடியாக்குவதில்லை. எனினும், A.V.Dicey (1964) என்பவர் பேணிவந்துள்ளார். பிரித்தானியப் பாராளுமன்றம் சட்ட ஆட்சியைப் பேணிவரும் கடமையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நியமத்தை அமுல்படுத்த முடியாத நீதிமன்றம் தொடர்பில் அது அரசியலமைப்பு விதியின் படி அல்ல எனும் கருத்தைக் கொண்டிராது என்பதே உண்மையாகும்.

(தொடரும்)

# பிள்ளைகளுக்கு 5 வயதுவரை பசும்பாலை வழங்குங்கள்

## கிராமிய அபிவிருத்தி அமைச்சு திறப்பு விழாவில் பிரதமர்



பிள்ளைகளுக்கு ஐந்து வயது வரை பசும்பால் வழங்குவது சிறந்தது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

கிராமிய அபிவிருத்தி அமைச்சின் புதிய கட்டடத்தை திறந்து வைத்துப் பேசுகையிலே இதனைத் தெரிவித்தார். கிராமத்திலிருந்து வந்த அமைச்சர் ஹரிசனுக்கு கிராமத்தின் பொருளாதாரத்தை முன்னேற்றும் பொறுப்பினை நான் ஒப்படைத்துள்ளேன். கிராமியப் பொருளாதாரத்தை விட மக்கள் அரை நகர பொருளாதாரத்தை நோக்கிச் செல்கின்றனர். இல்லாவிடின் மத்திய கிழக்கு பொருளாதாரத்தை நோக்கி அல்லது இத்தாலி, மலேசியா, சிங்கப்பூர், கொரியா பொருளாதாரத்தை நோக்கிச் செல்கின்றனர். இதன் நஷ்டம் கிராமியப் பொருளாதாரத்துக்கே.

நாம் கிராமத்தினை நவீனமயப்படுத்துவது எப்படி. இது தொடர்பாக கிராமம் பற்றிய நல்ல அறிவுள்ள பட்டதாரியான அமைச்சர் ஹரிசனுக்கு ஒப்படைத்து பல செயற்திட்டங்களை முன்னெடுக்கத் தயாராகிறோம்.

கிராமியப் பொருளாதாரத்தை முன்னேற்றும் போது மிருக வளர்ப்புத்துறை மிக முக்கியமானது மாடுகள் இருந்தாலும் எமது தேவைகள் இடம்பெறுவதில்லை. எனவே நல்ல பசுக்களை வழங்கி மிருகப் பண்ணைகளை நடத்தி பால் உற்பத்திகளை மேம்படுத்த நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராமத்தில் பால் உற்பத்தியை மேம்படுத்துவதாயின் கிராமத்திலே விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். கிராமத்தில் வாழும் பிள்ளைகளுக்கு 5வயது வரை பால் வழங்க வேண்டும். இப்போது நாம் அநேகமாக பால் மாவினையே வழங்குகிறோம். பிள்ளைகளுக்கு பசுப்பால் வழங்க முடியுமா? என நாம் சிந்தித்தோம்.

எம்மால் இதனை செயற்படுத்துவதனால் கிராமியப் பிள்ளைகளின் போசாக்கினை அதிகரிக்கலாம். இந்தப் புதிய கட்டடத்திற்கு குடிபுகுவதற்கு முன் சிங்கள சோதிடப்படி பார்க்குமாறு அமைச்சர் ஹரிசனைக் கேட்டேன். எல்லாப் பகுதியையும் பாருங்கள். பத்தினி கடவுள் உட்பட சகல கடவுள்களது ஆசீர்வாதத்தைப் பெறுமாறு கேட்டுக் கொண்டேன். தமிழ் முறையையும் கட்டடக் கலையையும் பாருங்கள். மலேசியா, இந்தோனேசியா, வியட்நாம், சீன, ஜப்பான் நாடுகளிலுள்ள முறையையும் பாருங்கள் இதன்பிறகு மீண்டும் அரிசி நெருக்கடி ஏற்படாது கட்டடத்தைத் தெரிவு செய்யுங்கள் என நான் ஆலோசனை வழங்கினேன் என்றும் பிரதமர் கூறினார்.





பேருவளை பிரதேச செயலகத்தில் 84மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நான்கு மாடிகளைக் கொண்ட புதிய கட்டடத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த சனிக்கிழமை(25) திறந்துவைத்தார். இவ்விழாவில் அமைச்சர்கள் டாக்டர் ராஜித சேனரத்ன,மேல்மாகாண சபை அமைச்சர்களான சுமித்ரால் மெண்டிஸ்,ரன்ஜித் சோமவன்ஸ, மாகாணசபை உறுப்பினர் இப்திகார் ஜமீல்,பேருவளை சுதந்திரக் கட்சி அமைப்பாளர் எம்.எம்.அம்ஜாத்,முன்னாள் நகரபிதா மஸாஹிம் முகம்மட்,முன்னாள் உபதலைவர் ஹஸன் பாஸி,முன்னாள் பிரதேசசபைத் தலைவர்களான குஸ்மன் சில்வா, ஏ.ஆர்.எம். பதியுதீன் மாவட்டச் செயளாலர் யு.டீ.சீ ஜயலால்,பிதேச செயலாளர் சதுரமல்ராஜ் உட்பட மற்றும் பலரும் பங்குபற்றினர். (படம்- பீ.எம்.முக்தார்)

## குளியாப்பிட்டி கிராம பாதைகள் செப்பனிடப்பட்டு திறந்து வைப்பு

**(குருநாகல் இக்பால் அலி)**

குளியாப்பிட்டிய தேர்தல் தொகுதியில் நீண்ட காலமாக திருத்தியமைக்கப்படாமல் இருந்த கிராமிய பாதைகள் செப்பனிடப்பட்டு மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதைகள் மக்களின் பாவனைக்காக வடமேல் மாகாண முதல் அமைச்சர் தர்மசிரி தசாநாயக்கவினால் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

மாகாண சபையினால் 35 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்த நிதி உதவித் திட்டத்தின் கீழ் இந்தக் கிராமிய பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. கிரிந்த முகலங்யாய பாதை, தெஹிகம கரகஹகெதர பாதை மற்றும் பொதுவெவ மத்திய வீதி ஆகியவைகளே மக்களின் பாவனைக்காக ஒப்படைக்கப் பட்டது.

இந்த பாதை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 500 குடும்பங்கள் இந்தப் பாதையின் மூலம் நன்மையடையவுள்ளனர்.

## நேர்முகத்தேர்வு நடந்தும் நியமனம் வழங்கவில்லை

### வடமத்திய பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்

**( கலாவெவ நிருபர்)**

வடமத்திய மாகாண அரச சேவையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தெரிவு செய்ய நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்பட்டு பல மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் தமக்கு இதுவரை நியமனம் கிடைக்கவில்லை எனவும் இது சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் வடமத்திய மாகாண சபை கட்டடத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு போட்டிப் பரீட்சையும்,பட்டதாரி ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சையும் ஒரே காலத்தில் நடாத்தப் பட்டது. ஆனால் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டு அவர்கள் சம்பளமும் பெறுகின்றார்கள்.

ஆனால் தமக்கு இதுவரை நியமனம் வழங்கப்படாது அநீதி விளைவிக்கப்பட்டுள்ளது.நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு 04 மாதங்களும் கடந்த நிலைமையில் இது சம்பந்தமாக வடமத்திய மாகாண ஆளுநர், வடமத்திய மாகாண முதலமைச்சர் போன்றோருக்கு கடிதம் மூலமும், நேரடியாகவும் எடுத்துக் கூறியும் சாதகதான எந்தவொரு பதிலும் தமக்கு கிடைக்கவில்லை எனவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவித்தனர்.

## லக்கலயில் உதா கம்மான மாதிரிக்கிராமம் திறப்பு

**(அஷ்ரப். ஏ. சமத்)**

மாத்தளை லக்கலயில் மாதிரி வீடமைப்புக் கிராமத்தில் 25 வீடுகளைக் கொண்ட மாதிரிக்கிராமம் அமைச்சர் சஜித் பிரேமதாசாவினால் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் மாத்தளை மாவட்டத்தின் 316 இளைஞர் யுவதிகளுக்கு நிர்மாணத்தொழில் ஈடுபடுவதற்காக 24 இலட்சம் பெறுமதியான உபகரணங்களும் 285 வயோதிபர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிகார மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



கொழும்பு கண்டி போன்ற நகரங்கள் தவிர்ந்த ஏனைய கிராமிய பிரதேசங்களில் 330 உதா கம்மான மாதிரி வீடமைப்புக் கிராமங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக 3 இலட்சம் ரூபா வீடமைப்புக் கடனும் அரச காணிகள் 10-20 பேர்ச்சஸும் இலவசமாக வழங்கப்பட்டு மற்றும் உள்ளக பாதைகள், நீர், மின்சாரமும் வழங்கப்பட்டு இக் கிராமங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதாக அமைச்சர் சஜித் பிரேமதாச கூறினார்.

## சம்மாந்துறையில் 415 மில்.செலவில் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்



(எம்.சி. அன்சார் - சம்மாந்துறை)

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறையில் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 415 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

மிக நீண்டகாலமாக சம்மாந்துறை வங்களாவடியில் அமைந்துள்ள சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட காரியாலயத்தில் தற்காலிகமாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இயங்கிவரும் இந்நிறுவனமானது திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவருமான எம்.ஐ.எம்.மன்சூரின் அயராத முயற்சியின் காரணமாக உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு இந் நிறுவனத்தை நிர்மாணிக்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளதுடன், சம்மாந்துறை வங்களாவடி தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகாமையில் இதற்கென 3 ஏக்கர் நிலப்பரப்பும் ஒதுக்கப்பட்டுள்ளது.

உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் அமையவுள்ள இடத்தினை பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர், இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்ததின் உயர் அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள், பொறியியலாளர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டு அதன் நிர்மாணப்பணிகள் சம்பந்தமாக கலந்துரையாடலிலும் ஈபட்டிருந்தனர்.

சம்மாந்துறையில் நிர்மாணிக்கப்படவுள்ள உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் வியாபார நிருவாகத்தில் தேசிய உயர் டிப்ளோமா, முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா, தொழில்நுட்பவியலில் (விவசாயம்) தேசிய உயர் டிப்ளோமா, உள்ளிட்ட 15 கற்கை நெறிகள் முழுநேரமாகவும், பகுதி நேரமாகவும் நடைபெறவுள்ளன. இதன் மூலமாக க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்ல முடியாதுள்ள அம்பாறை மாவட்ட மாணவர்களின் உயர் கல்விக்கு இது பெரிதும் வழிவகுக்கும்.

## அம்பாறை பட்டதாரிகளுக்கு விரைவில் நிரந்தர தீர்வு

### பிரதி அமைச்சர் அமீர்அலி

**(வாழைச்சேனை நிருபர்)**

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் மேற் கொண்டுவரும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வெகுவிரைவில் தீர்வைப் பெற்றுத் தருவதாக பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலியிடம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மீண்டும் உறுதியளித்துள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

வேலையற்ற பட்டதாரிகளின் உண்ணாவிரதம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலயே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு காரியாலய திறப்பு விழாவிற்கு வருகைதந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் பட்டதாரிகளின் நியமனம் தொடர்பாக மீண்டும் சந்தித்துப் பேசிய பிரதியமைச்சர் அமீர் அலி இந்த மாவட்டங்களில் வேலையற்ற பட்டதாரிகள் உண்ணாவிரதத்தை தொடர்ச்சியாக (06) நாட்கள் மேற்கொண்டு வருவதாகவும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டிய அவசியத்தையும் தெளிவுபடுத்தினார்.

கிழக்கு மாகாணத்தில் சுமார் 4500 பட்டதாரிகள் நீண்டகாலமாக வேலையின்றிப் பெரும் கஸ்டத்தில் இருப்பதாகவும், அவர்களின் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டினால் பட்டதாரிகள் நன்மையடைவதோடு மட்டுமன்றி கிழக்கு மாகாணத்திற்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கும் எனவும் தெரிவித்தார். இதே வேளை வேலையற்ற பட்டதாரிகள் இந்தப் பிரச்சினையை தீர்க்க உதவுமாறு அமைச்சர் றிசாட் பதியுதீனிடம் நேரடியாகவும் மகஜர் மூலமும் கோரிக்கை விடுத்திருந்தனர். வேலையற்ற பட்டதாரிகளுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆக்கபூர்வமான தீர்வைப் பெற்றுத் தருமென அக்கட்சியின் தலைவர் அமைச்சர் றிசாட் பதியுதீனும், தவிசாளர், பிரதியமைச்சர் அமீர் அலியும் பாதிக்கப்பட்டவர்களிடம் உறுதியளித்திருந்தனர்.

## ஹொரவப்பொத்தானையில் கருத்தாடல் நிகழ்வு

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் ஹொரவப்பொத்தானை கிளை,நவீன தொழில்நுட்பக் கற்கைகள் நிறுவகமும், கல்விக்கான சகவாழ்வு மன்றம் ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கமும் இணைந்து நடத்தும் கருத்தாடல் நிகழ்வென்று எதிர்வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி மு.ப. 8.30 முதல் பி.ப.1.30 மணிவரை ஹொரவப் பொத்தானை பிரதேச சபை கோட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் புதிய அரசியலமைப்பும் தேர்தல் முறை மாற்றமும் எனும் தலைப்பில் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளரும், மீள்பார்வை பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான சிராஜ் மஷ்ஹூர்,இலங்கை முஸ்லிம் தனியார் சட்டமும் இலங்கையின் சட்டம், பொது ஒழுங்குகள் ஏற்பாடுகளில் முஸ்லிம்களும் எனும் தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.எம்.ஹக்கீமும் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் ஹொரவப்பொத்தானை மற்றும் கஹடகஸ்திகிலிய பிரதேச அதிபர்கள்,ஆசிரியர்கள்,அரசியல் பிரமுகர்கள்,அரசியல் செயற்பாட்டாளர்கள்,உலமாக்கள், வர்த்தக பிரமுகர்கள்,இளைஞர்கள் சமூக ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு அழைக்கப்படுகின்றனர்.மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். அஷ்ஷெய்க் ஐ.எம்.ஹுசைன் -0778525330 ஏ.எம்.உவைஸ்-0773613621, ஆர்.எம்.றமீஸ்-0768850006

## சீனன்கோட்டையில் டெங்கு ஒழிப்புத்திட்டம்



**(பேருவளை நிருபர் பி.எம். முக்தார்)**

பேருவளை நகர சபை பகுதியில் டெங்குநோய் தீவிரமாக பரவியுள்ளதையடுத்து டெங்கு ஒழிப்புவேலைத் திட்டம் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டது.

பொது சுகாதார பரிசோதகர்கள் நேற்று சீனன்கோட்டைப் பகுதியில் வீடுவீடாகச் சென்று பரிசோதானை மேற்கொண்டனர். சினன் கோட்டைப் பள்ளிச் சங்கத்தின் பங்களிப்புடன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் சீனன் கோட்டைப் பகுதி இளைஞர்கள், அல் ஹுமைஸரா தேசிய பாடசாலைமாணவர்கள் இதன் போது பூரண ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. சீனன் கோட்டை பள்ளிச்சங்க பிரதித் தலைவர் எம்.எஸ்.எம். துகைன் ஹாஜியார் இணைச் செயளாளர், எம்.எம்.எம். ஷிஹாப் ஹாஜியார் ஆகியோரும் இதன் போது சமூகமளித்திருந்தனர்.

டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் வகையில் சுற்றுச்சூழலை வைத்திருக்காது சுத்தமான முறையில் சுற்றுச் சூழலை வைத்துக் கொள்ளுமாறு சுகாதார பிரிவினர் கேட்டுக் கொண்டனர். மக்களை விழிப்பூட்டும் வேலைத் திட்டங்களும் பாடசாலைகளிலும் வீடுகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

டெங்குகாய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளபகுதிகளுக்கு புகை விசுரும் பணிகளும் நடைபெறுகின்றன. சீனன் கோட்டைப் பள்ளிச்சங்கம் பேருவளை சுகாதார வைத்தியர் அதிகாரி பணிமனையுடன் இணைந்து டெங்குஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.



கல்வியமைச்சின் இரண்டாம் தேசிய மொழி போட்டி-2016 ற்கான, வாசிப்புப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற பாணந்துறை அல்-பஹ்ரியா மத்திய கல்லூரி மாணவன், எம்.ஏ.எம்.அமீன் கல்லூரியினால் கௌரவிக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம். அதிபர் எம்.எம்.எம்.கஸ்ஸாலி, வகுப்பாசிரியை ஏ.மும்தாஜ் பேகம், பெற்றோர்களான எம்.எல்.எம்.அஜ்வர் தம்பதியினர் மற்றும் பிரதி அதிபர் எம்.அருமைநாயகம், உதவி அதிபர் ஏ.ஆர்.எம்.உனைஸ், பிரிவுத் தலைவர் டீ.ஏ.ஆர்.சிறீலால் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

# களுத்துறை துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட சமயங் என்ற அருண வழங்கியிருந்த பேட்டி

## இந்த இழிநிலைக்கு சமூகமே காரணம்

களுத்துறையிலிருந்து கடுவெலை நீதிமன்றத்துக்கு கைதிகளை அழைத்து வந்த பஸ் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது கைதிகள் ஐவரும் இரு சிறைச்சாலை அதிகாரிகளும் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் நாட்டை கலக்கிய பாதாள உலகைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குவார். அவர் அருண உதயசாந்த



அல்லது ரணாலே சமயங் என்பவராவார். இவரது பெயர் முழு நாட்டுக்கும் பரவக் காரணம். 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ஆம் திகதி கடுவெல நீதிமன்ற வளவில் பாதாள உலகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவத்துடனாகும்.

வலது தோள்ப்பகுதியில் வெடிபட்டாலும் சமயங் என்பவருக்கு அன்று தனது உயிரைப் பாதுகாத்துக் கொள்ள முடிந்தது. என்றோ ஒருநாள் தனக்கு இவ்வாறான ஒரு முடிவு கிடைக்குமென்ற எதிர்பார்ப்புடனே சமயங் விளக்கமறியலில் தனது காலத்தைக் கழித்துள்ளார். சமயங் ஒருநாள் லங்காதீப பத்திரிகைக்கு பத்திரிகையாளர் பிரும் மேனக கமகேயுடன் தொடர்பு கொண்டு தன்னைப் பற்றிய ஒரு பேட்டியை அளித்துள்ளார்.

**கேள்வி - நான் உங்களை அருண என்று அழைக்கவா அல்லது சமயங் என்று அழைக்கவா?**

**பதில்** - பிரச்சினையில்லை அருண என்றே அழையுங்கள்.

**கேள்வி - சமூகம் ஏன் உங்களை சமயங் என்று அழைக்கின்றது?**

**பதில்** - நண்பர்களோடு இருந்து தடுமாறியதால் சொல்லுவதுதான். கேட்கமாட்டார்கள் அதனைச் சொல்வார்கள்.

**கேள்வி - உங்களுக்கு சண்டியர் ஆக வேண்டிய தேவை இருந்ததா?**

**பதில்** - எனக்கு சண்டியராகவோ பாதாள உலகத்தினனாகவோ தேவை இருக்கவில்லை. எனக்கு எனது போக்கில் வாழ வேண்டிய தேவையே இருந்தது. ஆனால் அதற்கு இடமில்லையே.

**கேள்வி - உங்களது ஊர் என்ன?**

**பதில்** - எனது ஊர் பொலன்னறுவை. ஆனால் நான் இதனை பின்னர் தான் அறிந்து கொண்டேன்.

**கேள்வி - உங்களின் தாய் தந்தையர் ஆசிரியர்கள் என்று கூறுகிறார்களே அது உண்மையா?**

**பதில்** - ஆம் உண்மைதான். அவர்கள் என்னை வளர்த்தவர்கள்.

**கேள்வி - குடும்பத்தில் உங்களுக்கு சகோதர சகோதரிகள் உள்ளார்களா?**

**பதில்** - இல்லை நான் மட்டும்தான்.

**கேள்வி - எங்கே படித்தீர்கள்?**

**பதில்** - பேமிரிய என்ற இடத்தில்.

**கேள்வி - உங்களுடைய சிறுவர் காலம் எப்படி அமைந்தது?**

**பதில்** - எனக்கு ஐந்து வயதில் தந்தை இறந்து விட்டார். எங்களுக்கு பெரும் சொத்து இருந்தது. தாயும் நானும் மாத்திரமே இருந்ததால் எமது சொத்து மீது ஆசைப்பட்டவர்கள் எமக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தினார்கள். நான் அந்த அநீதி பற்றி பேச முற்பட்டபோது, நான் வளர்த்த பிள்ளை என்று கூறி என்னை ஒதுக்கிவிட்டார்கள்.

**கேள்வி - உறவினர்கள் உங்களுக்கு உதவவில்லையா?**

**பதில்** - அவர்கள் எங்களை ஒதுக்கியே வைத்தார்கள். உதவ யாரும் முன்வரவில்லை.

**கேள்வி - உங்களின் கல்வி நடவடிக்கைகள் என்ன?**

**பதில்** - நான் க.பொ.த. சாதாரண தரம் வரை படித்து உயர்தரத்திற்கும் தெரிவானேன்.

**கேள்வி - உங்களின் விருப்பமான பாடங்கள் என்ன?**

**பதில்** - எனக்கு விருப்பமான பாடங்கள் சிங்களமும் கணிதமும்.

**கேள்வி - நீங்கள் உயர்தரம் படிக்க வேண்டும் என்று எண்ணவில்லையா?**

**பதில்** - ஊரிலே பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டே வந்ததனால் படிக்க முடியாமல் போனது. நண்பர்களில்தான் தங்கியிருந்தேன். என்னையும் தாயாரையும் ஊரிலிருந்து விரட்டுவதற்கு கோபக்காரர்கள் பல்வேறு வேலைகளை செய்தார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் என்மீது தாக்குதல்களை மேற்கொண்டார்கள். அதன் பின்தான் நான் இந்த நிலைக்கு வந்தேன்.

**கேள்வி - கஷ்டங்கள் ஏற்பட்டதாக கூறினீர்கள் அவை என்ன?**

**பதில்** - தந்தை இறந்து இரண்டு மூன்று வருடங்களில் எங்களை விரட்ட வேண்டிய தேவை ஏற்பட்டதால் என்னை கொல்வதாக கூறி கடிதம் ஒன்று வந்தது. அந்த கடிதத்தில் பணம் தராவிட்டால் என்னை கொல்வதாக கூறியிருந்தார்கள். அதற்கு பயந்த தாயார் அது குறித்து நவகமுவ பொலிசில் முறைப்பாடு செய்தார். அப்போது நான் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். இந்த விடயங்களை அப்போதைய பொலிஸ் புத்தகங்களில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

**கேள்வி - இந்த விடயங்களை ஆசிரியர்களிடமோ அல்லது வேறு பெரியவர்களிடமோ கூற வில்லையா?**

**பதில்** - அப்போது நான் சிறிது சிறிதாக நண்பர்களோடு பழகத் தொடங்கியிருந்தேன். எனது தாயார் என்னை அவர்களிடமிருந்து மீட்டெடுக்க முயற்சித்தாலும் எனக்கு சகலதும் வெறுத்துப் போயிருந்தது.

**கேள்வி - கைக்கு எவ்வளவாவது பணம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதா?**

**பதில்** - இல்லை, இல்லை தாயார் என்னை நன்றாகவே கவனித்தார். எங்களுக்கு கடை இருந்தது. அதனை நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம்.

**கேள்வி - பாடசாலைக் காலத்தில் காதல் தொடர்புகள் இருந்ததா?**

**பதில்** - காதல் தொடர்புகள் இருந்தாலும் அது பற்றி ஆழமாக சிந்திப்பதற்கு எனது மனம் இடம்கொடுக்கவில்லை. 2004ஆம் ஆண்டு நான் சாதாரண தரம் எழுதினேன். அதன் பின்னர் நான் அதிகமாக வீட்டிலேயே இருந்தேன்.

**கேள்வி - முதன் முதலில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டது எப்போது?**

**பதில்** - 2007ல். காரணம், துப்பாக்கி ஒன்றை வைத்திருந்தவர்களுடன் நான் இருந்ததாக கூறியே கைது செய்தார்கள். அவ்வாறு கைது செய்தபோது என்னிடம் குண்டொன்று இருந்ததாக கூறி உள்ளே வைத்தார்கள். அதிலிருந்துதான் எனது வாழ்க்கை வேறுபட்டது.

**கேள்வி - முதன் முதலில் பொலிஸார் உங்களை கைது செய்தபோது என்ன நினைத்தீர்கள்?**

**பதில்** - பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட போது அவர்களிடம் அடி வாங்கினேன். அப்போதெல்லாம் எனது தாயாரின் ஞாபகமே எனக்கு வந்தது. எனது தாயார் இன்றும் நொண்டிக் கொண்டே இருக்கிறார். என்னை பார்க்க வந்தே எனது தாயாரின் காலில் காயம் ஏற்பட்டுள்ளது. பொலிஸார் போட்ட குண்டினால்தான் எனக்கு இந்த நிலை ஏற்பட்டது. இல்லாவிட்டால் நான் இந்த நிலைக்கு வந்திருக்க மாட்டேன்.

**கேள்வி - மீண்டும் சிறையிலிருந்து எப்போது வெளியே வருவீர்கள்.**

**பதில்** - 2009ல்.

**கேள்வி - நீங்கள் திருமணம் முடித்துள்ளீர்களா?**

**பதில்** - 2014இல் தான் திருமணம் முடித்தேன். எனக்கு ஒரு குழந்தையும் உள்ளது.

**கேள்வி - நீங்கள் குழியில் விழுந்து விட்டீர்கள். இப்போது உங்கள் பிள்ளையின் எதிர்காலம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்** - நான் விழுந்த சமூகத்திற்குள் எனது பிள்ளை விழுவதற்கு இடமளிக்க மாட்டேன். நான் எனது பிள்ளையை இங்கு வரவழைக்கக்கூட மாட்டேன். காரணம் எனக்கு இருப்பது எனது தாயும் மனைவியும் பிள்ளையும் மாத்திரமே.

**கேள்வி - இந்த நிலைமையில் உங்களோடு இருந்த உங்களது நண்பர்களுக்கும் பிரச்சினைகள் ஏற்படுமே?**

**பதில்** - ஆம். கட்டாயம் அது ஏற்படும்.

**கேள்வி - உங்களைப் பழிவாங்கும் எதிர்க்கட்சியினருக்கு அரசியல் ஒத்துழைப்பு இருப்பதாக கூறுகிறார்களே?**

**பதில்** - ஆம். நானும் அவ்வாறுதான் நினைக்கிறேன்.

**கேள்வி - அரசியலில் யாருக்காவது வேலை செய்துள்ளீர்களா?**

**பதில்** - எனது பங்களிப்பென்றால் இல்லை. எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்றால் அரசியல் வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

**கேள்வி - வாழ்க்கையை மாற்றிக் கொண்டு புதிய உலகொன்றுக்குள் செல்ல தோன்றவில்லையா?**

**பதில்** - நான் புதிய வாழ்க்கையொன்று வாழ நினைக்கும்போதுதான். திரும்பத் திரும்ப பிரச்சினைபடுத்துகிறார்கள். மனைவியோடும் பிள்ளையோடும் வெளிநாடொன்றுக்குச் சென்று வாழத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். நீதிமன்ற வளவில் வைத்து என்னை துப்பாக்கிப் பிரயோகம் செய்தது நான் மாற வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில்தான். கடுவெலையில் தூள் விற்க வேண்டாம் என்று கூறியதற்காகவே எனக்கு சுட்டார்கள். நான் மாற நினைக்கும்போது எனது நண்பர்களை கொல்கிறார்கள்.

**கேள்வி - 27வயதுதான் ஆகிறது வாழ்க்கையில் வந்த வேகம் அதிகம் என்று தோன்றவில்லையா?**

**பதில்** - எனது வாழ்க்கையை வேகமாக்கியது சமூகமே. எனக்கு இவர்கள் அடிக்கும் அளவிற்கு நான் குற்றம் செய்ததில்லை. என்னால் பிரச்சினையில் விழுந்தது என்னை இந்த நிலைமைக்கு மாற்றியவர்கள் மாத்திரமே.

**கேள்வி - உங்கள் வாழ்க்கைக்கு ஆபத்தொன்று நேர்ந்தால்?**

**பதில்** - எனக்கு இன்னும் வாழ்வதற்கு வீட்டுச் சூழல் உள்ளது. நான் பிரச்சினைப் படுத்தியது எனக்கு பிரச்சினைகளை செய்தவர்களுக்கு மாத்திரமே. நான் கௌரவமான குடும்பத்தின் பிள்ளை. நான் இல்லாவிட்டாலும் எனது பிள்ளைக்கு நல்ல கௌரவமான வாழ்க்கையொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டும். எனக்கு நேர்ந்தவைகள் எனது பிள்ளைக்கு நேர நான் இடமளிக்க மாட்டேன்.

நன்றி லங்காதீப

---

National Water Supply & Drinage Board

## நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

## விலைமனு அறிவித்தல்

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வழங்கல்கள் / வேலைகளுக்காக தகைமை மற்றும் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படும் கேள்விப் பிணைமுறி | தகைமை தேவைப்பாடுகள் | மதிப்பீட்டு செலவு(ரூபா) வெட் வரி நீங்கலாக | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | |
| களனி பிராந்தியத்தில் அனியகன்வில் களஞ்சிய கட்டிடத்தை அமைத்தல்<br>**ஒப்பந்த இல:** RSC(WN)/CIVIL/KEL (RH)/2016/30 | 8,000/- + பெ.சே. வரி | ரூபா. 184,500/- | கட்டட நிர்மாணத் துறையில் c6 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 12.3 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை<br>தொலைபேசி/ தொலைநகல்: 0112635885 | 27/03/2017 10.00 மணி |
| வெருகல் மாவட்ட செயலாளர் பிரிவில் குழாய் விரிவாக்கத்திற்கு uPVC/DI குழாய்கள், பொருத்திகள், உதிரிப்பாகங்கள், DI வால்வுகள் மற்றும் உதிரிப் பாகங்களை பதித்து இணைத்தல்<br>**ஒப்பந்த இல:** RSC(E)/DGM/16BN/LAYING/VERUGAL/2017/02 | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 130,500/- | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் c7 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவு சான்றிதழ் | 8.6 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தே.நீ.வ.வ.ச., இல: 48A/1, கண்டி வீதி, மட்டிக்கலி, திருகோணமலை.<br>தொலைபேசி: 026-2222519,<br>தொலைபேசி: 026-2225225 | 15/03/2017 14.30 மணி |
| மட்டக்களப்பு பிராந்தியத்தில் Ferrule துண்டிப்பிற்காக அகழ்வு மேற்கொள்ளலும் மீளவும் நிரப்பலும் மற்றும் சீரமைத்தல் வேலைகள்<br>**ஒப்பந்த இல: RSC(E)/DGM/O&M/DISCONN/BATTI/2016/78** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 32,500/- | நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையில் C8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CID நிறுவனத்தில் பதிவு | 2.14 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தே.நீ.வ.வ.ச., இல: 48A/1, கண்டி வீதி, மட்டிக்கலி, திருகோணமலை.<br>தொலைபேசி: 026-2222519,<br>தொலைபேசி: 026-2225225 | 15/03/2017 14.30 மணி |
| **இயந்திரம் மற்றும் மின்னியல் கேள்விகள்** | | | | | | |
| பாரிய பொலன்னறுவை நகர அபிவிருத்தி திட்டத்துக்கு M&E கருவிகளை வழங்கி, பொருத்தி, பரிசோதித்து, ஆரம்பித்துவைத்தல்.<br>**ஒப்பந்த இல:** P&D/M&E/GPTDWSP/2016/05 | 25,000/- + பெ.சே. வரி | ரூபா. 2,500,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச்சான்றிதழ் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை<br>தொலைபேசி/ தொலைநகல்: 0112635885 | 22/03/2017 10.00 மணி |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| ரன்ன, கந்தளாய் மற்றும் பியகம சுத்திகரிப்பு நிலையங்களுக்கு தூளாக்கப்பட்ட செயற்படு காபன் 40 டொன் வழங்கி, விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல:** SUP&MM/PACARBON/2016/03 | 8,000/- + பெ.சே. வரி | ரூபா. 204,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச்சான்றிதழ் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை<br>தொலைபேசி/ தொலைநகல்: 0112635885 | 24/03/2017 10.00 மணி |
| தூளாக்கப்பட்ட செயற்படு காபன் (ஜம்போ உறைகள்) 33 டொன் வழங்கி, விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல: SUP&MM/PACARBON-JUMBO/2016/03** | 8,000/- + பெ.சே. வரி | ரூபா. 160,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச்சான்றிதழ் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை<br>தொலைபேசி/ தொலைநகல்: 0112635885 | 17/03/2017 10.00 மணி |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்தல்** | | | | | | |
| ராவதாவத்தையில் திட்டத்துக்கு ஒரு கார் மற்றும் வேன் வாகனத்தை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல:** SHIFT/VEH-HIRE/AFD/PMU/2016/02R | 2000/- + பெ.சே. வரி | ரூபா. 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை<br>தொலைபேசி/ தொலைநகல்: 0112635885 | 16/03/2017 10.00 மணி |
| **பயிற்றுவிக்கப்பட்ட வேலையாட்கள்** | | | | | | |
| காகாபல்லி நீர் வழங்கல் திட்டத்துக்கு பயிற்றுவிக்கப்படாத வேலையாட் சேவையை வழங்குதல்<br>**ஒப்பந்த இல:** O&M(NW)/SER/O&M/KAKA/ 2017/09 | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 14,000/- | பயிற்றுவிக்கப்படாத வேலையாட் சேவைகளை வழங்குவதில் இரண்டு வருட அனுபவம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடமேல்), தே.நீ.வ.வ.ச., தம்புள்ளை வீதி, குருநாகல்<br>தொ.பே: 037-2221161 தொ.நகல்: 037-2230086 | 15/03/2017 14.00 மணி |

தகுதித்தன்மைக்கான சான்றுகளுடன் வியாபாரக் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும். மற்றும் **இறுதித் திகதிக்கு முன்னைய நாள்** வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

கேள்விகள் மூடப்பட்டவுடனேயே சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். **தாமதமாக விலைமனு சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.**

**தவிசாளர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்**

தமிழக போலிஸ் நிலையங்களில்

# 'ஜெ' படம் நீக்கம்; இ.பி.எஸ் படம் ஏற்றம்



பொலிஸ் அலுவலகங்களில் ஜெயலலிதாவின் படங்களை அகற்றும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். ஜெயலலிதா படத்திற்கு பதிலாக தற்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியின் படங்களை மாட்டி வருகிறார்கள்.

அரசு அலுவலகங்களில் முதலமைச்சர் படங்களை மாட்டி வைத்திருப்பது வழக்கம். சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றவாளி என்று உச்ச நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ள முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் படங்களை அரசு அலுவலகங்களில் இருந்து அகற்ற வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவரும் தி.மு.க. செயல் தலைவருமான மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அரசு எந்த உத்தரவும் பிறப்பிக்காத நிலையில் படங்களை அகற்றுவதா? வேண்டாமா? என்று பல அலுவலகங்களில் தயக்கத்தில் இருக்கிறார்கள்.

ஆனால் பொலிஸ் அதிகாரிகள் தங்கள் அலுவலகங்களில் வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதா படங்களை அகற்றி வருகிறார்கள். தேவையில்லாத சர்ச்சையில் காவல்துறை சிக்க வேண்டாம் என்ற எண்ணத்தில் அமைதியாக இவ்வாறு செய்வதாக கூறப்படுகிறது.

சுவரில் மாட்டப்பட்டிருந்தது மட்டுமில்லாமல் மற்றொரு போட்டோவை சில அதிகாரிகள் மேஜை மீதும் வைத்திருந்தார்கள். இப்போது எல்லாவற்றையும் அகற்றி வருகிறார்கள்.

அதற்கு பதிலாக தற்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியின் போட்டோவை மாட்டி வருகிறார்கள்.

பொலிஸ் கமிஷனர் அலுவலகத்தில் இருந்த படங்களும் அகற்றப்பட்டு விட்டன. படங்களை அகற்றும்படி உத்தரவு எதுவும் வரவில்லை. நாங்களாகவே அகற்றினோம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மலேசியாவில் சவூதி முதலீடு



சவூதி அரேபியாவின் அரசுத்துறை எண்ணெய் நிறுவனமான அரம்கோ, மலேசியாவில் சிங்கப்பூர் எல்லையை ஒட்டிய பகுதியில் அமையவிருக்கும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் 7 பில்லியன் டொலர்களை முதலீடு செய்யும் என மலேசிய பிரதமர் நஜீப் ரசாக் தெரிவித்துள்ளார்.

அரம்கோ மற்றும் மலேசிய எண்ணெய் நிறுவனமான பெட்ரோனாஸிற்கு இடையே ஏற்படவிருக்கும் ஒப்பந்தம் பற்றி சவூதி அரசர் சல்மானின் விஜயத்தின்போது அறிவிக்கப்பட்டது.

இந்த முதலீடு பெட்ரோனாஸின் இலாபத்தை அதிகரிக்கும். ஆனால், சவூதி அரசு தனது ஆதிக்கத்தை அந்த பிராந்தியத்தில் நீட்டிக்க அது வழிவகுக்கும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மலேசிய பிரதமர் நஜிப், சவூதி ராஜ குடும்பத்தினருடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளார். கடந்த வருடம், நஜிப்பின் தனிப்பட்ட வங்கி கணக்கில் 7 இலட்சம் மில்லியன் டொலர் வைப்பு செய்யப்பட்டது தொடர்பில் அவர் மீது ஊழல் குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால், அது, சவூதி ராஜ குடும்பத்தினரால் பரிசாக கொடுக்கப்பட்டது என்று கூறி அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை வழக்கறிஞர்கள் முடித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# நாய்களை வெடிகுண்டுகளாக பயன்படுத்தும் ஐ.எஸ்.

உடலில் வெடி குண்டுகளை கட்டி தற்கொலை தாக்குதலுக்கு நாய்க்குட்டிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் பயன்படுத்துகின்றனர்.

ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள், தற்கொலை தாக்குதல் நடத்த பெண்கள் சிறுவர், சிறுமிகளை பயன்படுத்தி வருகின்றமை தொடர் சோகக் கதையாக இருக்கின்ற இந்நிலையில் தற்போது தற்கொலை தாக்குதலுக்கு நாய் குட்டிகளை பயன்படுத்தும் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. அது குறித்த வீடியோவை அல் ஹசத் அல் ஷாபி என்ற தீவிரவாத அமைப்பு சிரியாவில் வெளியிட்டது.

அதில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தற்கொலை தாக்குதலுக்காக ஒரு நாய்க்குட்டியின் உடலில் வெடிகுண்டு பெல்ட் கட்டுவது பதிவாகி இருந்தது. இந்த வீடியோ தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சிரியாவுக்கு எதிராக ஐ.நா. சபை தீர்மானம்: வீட்டோ மூலம் முறியடிக்க ரஷ்யா முடிவு

சிரியாவுக்கு எதிராக ஐ.நா. சபை நிறைவேற்றவுள்ள தீர்மானத்திற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவிக்க முடிவு செய்துள்ளது.

சிரிய ஜனாதிபதி பஷார் அல் அஸாத் ஆதரவு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்கள் படைகளுக்கும் இடையே கடந்த 5 ஆண்டுகளாக போர் நடந்து வருகிறது. மிதவாத கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்காவும், அஸாத்துக்கு ரஷ்யாவும் ஆதரவு அளித்து வந்தன. இப் போரில் சுமார் 3 இலட்சம் பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், ஏறத்தாழ 7 இலட்சம் பேர் இடம்பெயர்ந்தனர்.

இப் போரை முடிவுக்குக் கொண்டு வர கடந்தாண்டு அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் நாடுகள் இணைந்து பேச்சு நடத்தியும் இந்த விடயத்தில் உடன்படிக்கை ஏற்படவில்லை.



போர் விவகாரத்தில் சிரியா, ரஷ்யா இரண்டு நாடுகளும் அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக உள்ளன. சிரிய படைகள் குளோரின் வாயு, கடுகு வாயு ஆகியவற்றால் மக்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இது தொடர்பாக கடந்த வாரம் சிரிய படைகளிடம் ஐ.நா அமைதி பேச்சு நடத்தியும் பலனில்லை.

இந்நிலையில், சிரியாவுக்கு மற்ற நாடுகள் ஹெலிகொப்டர்கள் உள்ளிட்ட ஆயுதங்களை வழங்கக் கூடாது என தீர்மானம் நிறைவேற்ற ஐ.நா. முடிவு செய்துள்ளது. இதற்கான வாக்கெடுப்பு நடைபெறவுள்ள நிலையில், ரஷ்யா இந்த வாக்கெடுப்பை வீட்டோ மூலம் நிராகரிக்க முடிவு செய்துள்ளது.



ஈராக்கின் வட மொசூல் பகுதியில் தேசிய பாதுகாப்பு படைகளுக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்குமிடையே மோதல் உக்கிரமடைந்ததைத் தொடர்ந்து அங்கிருந்து பொதுமக்கள் தப்பியோட ஆரம்பித்துள்ளனர். அவ்வாறு யுத்த பகுதியிலிருந்து தப்பிவந்த முதிய தாயொருவரும் மகளும் போக்குவரத்துக்காக காத்திருப்பதையும், களைப்புற்றுள்ள தாய்க்கு மகள் தண்ணீர் புகட்டுவதையும் படத்தில் காணலாம்.

# முஸ்லிம் தடை உத்தரவு; டிரம்ப் இன்று கையெழுத்து

அமெரிக்காவில் நுழைய முஸ்லிம் பயணிகளுக்கு தடை விதிக்கும் புதிய உத்தரவில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இன்று கையெழுத்திடுகிறார்.

சிரியா, ஈரான், ஈராக், லிபியா, யெமன், சோமாலியா மற்றும் சூடான் ஆகிய 7 முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த அகதிகள், பயணிகள் அமெரிக்காவில் நுழைய தடை விதித்து கடந்த ஜனவரியில் ஜனாதிபதி டிரம்ப் உத்தரவு பிறப்பித்தார். இந்த தடையை சியாட்டிலிலுள்ள மாவட்ட நீதிமன்றம் நீக்கியுள்ளது. இதை எதிர்த்து அரசு தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் 7 நாடுகளின் முஸ்லிம் அகதிகள், பயணிகளுக்கு தடை விதிக்க வகை செய்யும் புதிய உத்தரவை ஜனாதிபதி ட்ரம்ப் இன்று பிறப்பிக்கவுள்ளார்.

இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் சீன் ஸ்பைசர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், புதிய தடை உத்தரவு புதன்கிழமை பிறப்பிக்கப்படும். இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. அவ்வளவு நேர்த்தியாக புதிய தடையாணை பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி டிரம்பின் தடை உத்தரவை எதிர்த்து அமெரிக்கா முழுவதும் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஒஸ்கர் விருது விழாவிலும் டிரம்பின் தடை உத்தரவை ஹொலிவூட் நடிகர், நடிகைகள் கடுமையாக விமர்சித்தனர். இதனிடையே புதிய உத்தரவை எதிர்த்தும் நாடு முழுவதும் போராட்டம் நடத்துவோம் என்று சமூக ஆர்வலர்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஈரான் போர்ப் பயிற்சியில் நவீன ஏவுகணைகள் பரிசோதனை



ஈரான் தனது கடற்படைப் போர்ப் பயிற்சியின்போது நவீன ஏவுகணைகளை ஏவி பரிசோதித்ததாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து 'பெர்ஸ்' செய்தி நிறுவனம் தெரிவித்ததாவது:-

'விலாயத் 95' என்ற பெயரில் தெற்குக் கடல் பகுதியில் நிகழ்த்தப்பட்ட கடற்படைப் போர்ப் பயிற்சியின்போது 'நாஸர்' என்ற 'குரூஸ்' வகை ஏவுகணை வெற்றிகரமாகப் பரிசோதித்துப் பார்க்கப்பட்டதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ஹுசேன் டெஹ்கான் கூறினார் என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

மேலும், 'தஸ்னீம்' செய்தி நிறுவனம் கூறுகையில், 'லேசர்' கதிர்களின் வழிகாட்டுதலுடன் இலக்குகளைத் தாக்கி அழிக்கும் மற்றொரு வகை ஏவுகணையும் கடற்படைப் போர்ப் பயிற்சியின்போது பரிசோதிக்கப்பட்டது என்றது. ரஷ்யாவின் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணையை அடிப்படையாகக் கொண்டு அந்த ஏவுகணை உருவாக்கப்பட்டதாக 2012ஆம் ஆண்டே செய்திகள் வெளியானது குறிப்பிடத்தக்கது.

இந்த ஏவுகணைகளின் நவீன ரகங்கள் எவ்வளவு தூரம் பாய்ந்து சென்று இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டவை என்ற விபரங்கள் வெளியிடப்படவில்லை.

## உலகச் செய்திகள்

# நடு ரோட்டில் இறங்கிய ஹெலிகொப்டர் டிரக் டிரைவரிடம் வழி கேட்ட பைலட்



கஸகஸ்தானில் வழி மாறிச் சென்ற விமானியொருவர், இடையில் தரையிறங்கி சாலையில் நின்றுகொண்டிருந்த டிரக் டிரைவரிடம் வழி கேட்ட சுவாரஷ்ய சம்பவம் நடைபெற்றுள்ளது.

கஜகஸ்தானைச் சேர்ந்த இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று திடீரென்று அங்குள்ள பிரதான வீதியில் அவசரமாக தரையிறங்கியுள்ளது.

ஹெலிகொப்டரிலிருந்து இறங்கி வந்த விமானி, வீதியில் நின்று கொண்டிருந்த டிரக் சாரதியிடம் தான் வழிமாறி வந்துவிட்டதாகவும், இதனால் தான் செல்ல வேண்டிய இடத்திற்கு எப்படி செல்லவேண்டும் என்று கேட்டறிந்து அதன் பின் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து கஸகஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கூறுகையில், இராணுவ ஹெலிகொப்டர் ஓட்டுநர்களுக்கு சரியாக இடங்கள் மற்றும் புவி அமைப்புகள் குறித்து தெரிகிறதா என்பதை அறிந்து கொள்வதற்காக இதுபோன்று பயிற்சி அளிக்கப்படும்.

சரியான இடத்தை அறிந்துகொள்வதற்கான இந்தப் பயிற்ச்சியில் விமானி வெற்றி பெற்றுள்ளார் என தெரிவித்துள்ளார்.

# பூமியிலிருந்து சூரியனுக்கு 'ரொபோடிக்' விண்கலம்

நாசா அதிரடி திட்டம்



பூமியிலிருந்து 15 கோடி கி.மீ. தூரத்தில் இருக்கும் சூரியனுக்கு ரொபோடிக் விண்கலத்தை அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது.

சந்திரன், செவ்வாய் மற்றும் விண்வெளி ஆய்வுகளுக்கு விண்கலன்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆனால், சூரியனுக்கு விண்கலம் அனுப்பி ஆய்வு செய்ய தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அமெரிக்காவின் நாசா மையம் சூரியனுக்கு விண்கலம் அனுப்பும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. பூமியிலிருந்து 14 கோடியே 90 இலட்சம் கி.மீ. தொலைவில் சூரியனுள்ளது.

மற்ற கிரகங்களை விட கடுமையான வெப்பம் கொண்டது. எனவே, அதற்கு ஏற்றாற்போல் விசேஷ விண்கலம் தயாரித்து அனுப்பப்பட உள்ளது. இதற்கான தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது நாசா விஞ்ஞானிகளின் முதல் முயற்சி என காட்டார்ட் விண்வெளி மைய விஞ்ஞானி எரிக்- கிறிஸ்டியன் தெரிவித்துள்ளார். சூரியனை மிக நெருக்கத்தில் சென்று ஆய்வு செய்ய முடியாது. அதே நேரத்தில் அதன் மேற்பரப்பில் ஆய்வு நடத்த திட்டமிட்டு இருக்கிறோம்.

சூரியனின் சுற்றுப்புற தட்பவெப்ப நிலை 5,500 டிகிரி செல்சியஸ் ஆக உள்ளது. அதற்கு தகுந்தாற் போன்று வெப்பத்தை தாங்க கூடிய வகையில் விண்கலம் தயாரிக்கப்படும். அது அடுத்த ஆண்டு அதாவது 2018இல் சூரியனுக்கு அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தென் சீனக்கடலில் கண்காணிப்பு தளம் அமைக்க சீனா முடிவு

சர்ச்சைக்குரிய தென் சீனக்கடலில் நீருக்கடியில் கண்காணிப்பு தளம் ஒன்றை அமைக்க சீனா முடிவு செய்துள்ளது

சீனாவின் தென்பகுதியில், பசுபிக் பெருங்கடலின் ஒரு பகுதியாக அமைந்துள்ள தென் சீனக்கடலில் சீனா ஆதிக்கம் செலுத்தி வருகிறது. உலகின் மூன்றில் ஒரு பகுதி கப்பல் போக்குவரத்து, இந்தப் பகுதி வழியே நடைபெறுவதாலும், இந்த கடலில் அடிப்பகுதியில் எண்ணெய், இயற்கை எரிவாயு வளம் இருப்பதாக சொல்லப்படுவதாலும் இது முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆனால், ''தென்சீனக் கடலில் எங்களுக்கும் பங்கு இருக்கிறது'' என்று பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, புருணை, தாய்வான் போன்ற நாடுகளும் உரிமை கொண்டாடி வருகின்றன. ஆனால், இந்தப்பகுதி முழுவதும் தங்களுக்கே சொந்தம் என்று சீனா கூறி வருகிறது.

தென் சீனக்கடல் விவகாரம் தொடர்பாக அமெரிக்காவுடனும் சீனா மோதல் போக்கை கையாண்டு வருகிறது. இந்நிலையில், தென் சீனக்கடலில் கண்காணிப்பு தளம் ஒன்றை அமைக்க சீனா முடிவு செய்துள்ளது. இந்த தளம் இருந்து நீருக்கடியில் உள்ள நடப்பு நிலவரத்தை கண்காணிக்கும் நோக்கத்துடன் அமைக்கப்படுகிறது. ஆனால், இந்த கண்காணிப்பு தளம் தென் சீனக்கடலில் எந்த இடத்தில் அமைக்கப்படுகிறது என்பது குறித்த தகவல் வெளியிடப்படவில்லை.

## சிறைச்சாலை பஸ்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

களுத்துறை, மல்வத்த பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் சிறைச்சாலை பஸ் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட சந்தேகநபர்கள் தப்பிச் சென்ற வேனை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர். ஹொரணை, மொரகஹஹேன பகுதியில் வைத்தே இந்த வேன் மீட்கப்பட்டுள்ளது.

பாதாளக் குழுத் தலைவர் சமயங் என்பவரை இலக்கு வைத்து நேற்று முன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் குறித்த நபர் உள்ளிட்ட அவருடன் கடுவலை நீதிமன்றுக்குச் சென்ற 5 கைதிகளும் 2 சிறைச்சாலை அதிகாரிகளும் பலியாகினர்.

பொலிஸ் சீருடையை போன்ற ஆடை அணிந்து வந்தவர்களால் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் மூவர் படுகாயமடைந்து தற்போது சிகிச்சை பெற்றும் வருகின்றனர்.

இந்நிலையில் தான் தாக்குதல்தாரிகள் வந்த வேனை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வேன் மற்றும் கெப் ரக வாகனத்தில் வந்த குறித்த சந்தேக நபர்கள், தாக்குதல் நடத்தி விட்டு, கெப் வண்டியை ஸ்தலத்திலேயே போட்டுவிட்டு குறித்த வேனில் தான் தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறான குற்றவாளிகளை எடுத்துச் செல்லும்போது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிந்து வைத்திருந்தும் இவ்வாறான சம்பவமொன்று நடைபெற்றுள்ளதை மேற்படி இரு திணைக்களங்களே பொறுப்பேற்க வேண்டுமென்று சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்துள்ளார். மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இவ்விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள 5 விசேட பொலிஸ் குழுக்களும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## காணாமல் போன ஊடகவியலாளர்களுகாக வவுனியாவில் போராட்டம்

இலங்கையின் வடக்கு கிழக்கு உட்பட ஏனைய பகுதிகளில் கடத்தப்பட்டு காணாமல்போன மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி எதிர்வரும் சனிக்கிழமை (4) அன்று காலை 10-12 மணிவரை வவுனியா பிரதான பேருந்து நிலையம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்த வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த ஊடக அமைப்புக்களையும், ஊடகவியலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. தொடர்புகளுக்கு:0776245508, 0776550632, 0772772826, 0775588141, 0773142763.

## சைடம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மாலபே சைடன் மருத்துவ கல்லூரியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் டாக்டர் சமீர சேனாரத்னவின் தற்காலிகமாக பதவிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மாலபே சைடம் தனியார் கல்லூரியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பதவி வகித்த டாக்டர் சமீர சேனாரத்ன மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகம் அவரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதென்று பொலிஸார் வெளியிட்டிருந்த அறிக்கையைத் தொடர்ந்தே அவர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

டாக்டர் சமீர சேனாரத்ன தனக்கு யிர் அச்சுறுத்தல் காணப்படுவதாக போலியாக காட்டுவதற்கே மேற்படி துப்பாக்கி சூட்டு சம்பவத்தை அரங்கேற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விடயத்தில் டாக்டர் சமீர சேனாரத்ன தற்போது தலைமறைவாகியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## மும்மானை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மும்மானை முஸ்லிம் வித்தியாலயத்துக்குரிய விளையாட்டுத்திடலை பாடசாலைக்கு விடுவித்த போதும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் நன்நடத்தைப் பிணை ஒன்றுக்கு கைச்சாத்திடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த உத்தரவினை ஆட்சேபித்துள்ள பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் இது தொடர்பாக எழுத்து மூலம் அறிக்கை சமர்ப்பிப்பதாக நீதிமன்றத்தில் அறிவித்தனர்.

ஆர்.ஆர்.ரி அமைப்பு சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் ஆஜராகினார்.

## 64 புதிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

28ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

கட்சிப் பதிவுக்கான இறுதித் திகதி நேற்றுடன் நிறைவடைந்துள்ள நிலையில் புதிதாக 64 அரசியல் கட்சிகள் பதிவுக்காக விண்ணப்பித்திருப்பதாக தேர்தல் செயலக உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

புதிதாக விண்ணப்பித்துள்ள அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பது தொடர்பாக பரிசீலனைக்குட்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவினால் விசேட குழுவொன்று நியமிக்கப்படும் என்றும் தேர்தல் செயலக உயரதிகாரி தெரிவித்தார்.

புதிதாக விண்ணப்பித்துள்ள அரசியல் கட்சிகளில் பல ஏற்கனவே களத்தில் உள்ள போதும் அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வது நிறுத்தப்பட்டிருந்ததால் அவற்றைப் பதிவுசெய்ய வாய்ப்பிருக்கவில்லை.

ஐந்து வருடங்களின் பின் புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்காக தேர்தல் செயலகம் விண்ணப்பங்களைக் கோரியிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச சபைகளுக்காக கோரப்பட்டிருந்த நியமனப் பத்திரங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதன் காரணமாக 2011 முதல் தேர்தல் கட்சிகளைப் பதிவு செய்வது நிறுத்தப்பட்டிருந்தது.

தற்போதும், நாட்டில் 64 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து வருட காலமாக அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்படாமை காரணமாக பெருந்தொகையான புதிய அரசியல் கட்சிகளுக்கு தேர்தல்களில் நேரடியாகப் போட்டியிட முடியாத நிலைமையும் ஏற்பட்டிருந்தது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக சட்ட வல்லுநர்களின் கருத்துக்களைப் பெற்ற பின்பே குறிப்பிட்ட இருபிரதேச சபைகளில் தேர்தல் நடத்தப்படும் வரை புதிய கட்சிகளைப் பதிவு செய்வதில்லை என விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பட்டதாரிகள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அவர்களின் துயர நிலை தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் பிரதமருக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

கிழக்கு மாகாண பட்டதாரிகளின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை முதலமைச்சர் பிரதமரிடம் நேரில் கையளித்ததுடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள வெற்றிடங்களை தற்போதுள்ள பட்டதாரிகளைக் கொண்டு நியமித்து விட்டு ஏனையோரை பயிற்சி அடிப்படையில் உள்வாங்குவது தொடர்பில் இதன்போது பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் வலியுறுத்திக் கூறப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள வேலையில்லாப் பட்டதாரிகளின் முழுமையான தரவுகள், விடயதாணங்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச வெற்றிடங்கள் ஆகியவற்றை முழு அறிக்கையாக சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க கிழக்கு முதலமைச்சருக்கு பணிப்புரை விடுத்தார், இது தொடர்பான அறிக்கையை நாளைய தினத்திற்குள் (01.03.2017) பிரதமரிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் குறிப்பிட்டார். இந்தப் பிரச்சினையை ஒரு தீவிரமான பிரச்சினையாகக் கருதி இந்த வாரத்திற்குள் ஒரு சாதகமான தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்க முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் கிழக்கு முதலமைச்சரிடம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பான விடயங்கள் குறித்து முதலமைச்சருடன் தொடர்பு கொள்வதற்கு பிரதமர் அலுவலகத்திலுள்ள சிரேஷ்ட அதிகாரியொருவரை பிரதமர் ரணில் விக்ரமசிங்க நியமித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

கடந்த எட்டு நாட்களாக வெயில் மழை பாராது போராட்டங்களை முன்னெடுத்து வரும் கிழக்கு மாகாண பட்டதாரிகளை வாக்குறுதிகளுடன் சந்திப்பதை விடுத்து சாதகமாக தீர்வொன்றுடனே நேரில் சந்திப்பதாக உறுதி பூண்டிருந்த கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் ஒரு கட்டமாகவே இன்று பிரதமரை சந்தித்திருந்தார்,

இதனடிப்படையில் ஒரு வாரத்திற்குள் கிழக்கு மாகாண பட்டதாரிகளுக்கு சாதகமான தீர்வினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக பிரதமர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அது மாத்திரமன்றி கிழக்கில் அரச முதலீடுகளின் ஊடான புதிய தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் தொடர்பான யோசனையொன்றும் கிழக்கு முதலமைச்சரினால் இதன் போது பிரதமரிடம் முன்வைக்கப்பட்டது.

முதலமைச்சரின் யோசனைகளை பாராட்டிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க கிழக்கில் அரச முதலீடுகளை ஏற்படுத்தி தொழில்வாய்ப்புக்களை வழங்குவது தொடர்பான யோசனைகளை விரைவில் அறிக்கையாக சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

## பிரதம நீதியரசராக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கூடிய இக்கூட்டத்தின்போதே பிரிசாத் டெப்பின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. 45 ஆவது பிரதம நீதியரசராக தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள இவரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னும் ஓரிரு நாட்களிலேயே உத்தியோகபூர்வமா பதவியில் அமர்த்துவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய பணிப்பாளராக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தபால், தபால் சேவைகள் முஸ்லிம் சமய கலாசார அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய அஷ்ஷெய்க் எம்.எச்.எம். ஸமீல் தேசிய திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக பதவியுயர்வு பெற்றுச் சென்றதன் பின்னரான வெற்றிடத்திற்கே அஷ்ஷெய்க் அப்துல் மலிக் நியமிக்கப்படவுள்ளார்.

புத்தளத்தைச் சேர்ந்த அஷ்ஷெய்க் அப்துல் மலிக் நளீமி தற்போது பொதுச் சேவை ஆணைக்குழுவில் கடமையாற்றிவருகிறார்.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவுடன் தொடர்புகொண்டு பொதுச் சேவை ஆணைக்குழுவின் வெற்றிடத்திற்கு வேறோர் அதிகாரியை நியமித்துவிட்டு, முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளராக அஷ்ஷெய்க் அப்துல் மலிக் நளீமியை நியமிக்கத் தீர்மானித்துள்ளதாகவும், அடுத்த வாரமளவில் நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.

## நீதி வழங்குவதில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

34 ஆவது அமர்வில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை தொடர்பில் கடந்த 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் இணைப் பங்காளர்களாக நாம் இணைந்து கொண்டு சுமார் ஒரு வருடங்களுக்கு மேற்பட்டுள்ள அல்லது 15 மாதங்கள் கடந்துள்ள நிலையில் நான் உரையாற்றுகிறேன்.

தான் 2016ம் ஆண்டு கூட்டத் தொடரில் கூறியதைப் போன்று, சுமார் 5,515.98 ஏக்கர் அரச காணிகள் மற்றும் 2,090.03 ஏக்கர் தனியார் காணிகள் 2016ஆம் ஆண்டில் எமது அரசு விடுவித்துள்ளது. 1,383.51 அரச காணிகள் 30.54 ஏக்கர் தனியார் காணிகள் கடந்த மாதமும் விடுவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நல்லிணக்க வழிமுறைகள் பற்றிய கலந்தாய்வுச் செயலணி பாதிக்கப்பட்ட சுமார் 7000 பேரின் கருத்துக்களை எழுத்து மூலம் பெற்றுக் கொண்டுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியை நிலைநாட்டவும் அவர்களின் உரிமையைப் பாதுகாக்கவும் எமது அரசு தொடர்ந்தும் செயற்படும் என்றார்;.

## இன நல்லிணக்கத்துக்காக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று பதிவுசெய்ய விண்ணப்பித்த இப்புதிய தேசிய நல்லிணக்க முன்னணியின் பொதுச் செயலாளராக வட்டரக்க விஜித தேரரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்வதற்கு தேர்தல் செயலகத்தால் வழங்கப்பட்டிருந்த இறுதித் தினம் நேற்றுடன் நிறைவடைந்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஐ.எம்.இல்யாஸ் மற்றும் சங்கரன் ஆகியோரும் இக்கட்சியின் முக்கிய பதவிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை முன்னெடுப்பதனை பிரதான நோக்கமாகக் கொண்ட இக்கட்சி பிரசாரக் கூட்டங்களில் எந்தவொரு மாற்றுக் கட்சிகளையும் எதிர்த்துப் பேசாது என கட்சியின் செயலாளர் வட்டரக்க விஜித தேரர் தெரிவித்தார்.

## தேசத்துரோக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இராஜாங்க அமைச்சருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்த மூவினத்தைச் சேர்ந்த 190 பேர் தேசத்துரோகிகளாக 1804 ஜுன் 07ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்யப்பட்டது. இந்த பிரகடனத்தை இரத்து செய்து அவர்களை நாட்டுக்காக போராடிய தேசிய வீரர்கள் என பிரகடனம் செய்யுமாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் 1804 ஜுன் 07ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலும் இணைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், தேசத்துரோகிகளாக பிரகடனம் செய்யப்பட்ட 190 பேர் குறித்து நீங்கள் அனுப்பி வைத்திருந்த கடிதம் சம்பந்தமாக தான் கவனம் செலுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

## தேசத்துரோகிகளான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மக்களும் பங்கெடுத்து சுதந்திரத்துக்காக போராடியிருந்தும் 82 சிங்கள வீரர்களை மாத்திரம் தேசிய வீரர்களாக பிரகடனப்படுத்தி வர்த்தமானியில் ஜனாதிபதி கையொப்பமிடுவது தமிழ், முஸ்லிம் மக்களை கவலைகொள்ளச்செய்துள்ளது.

1818ஆம் ஆண்டு முதலாவது சுதந்திர கிளர்ச்சியில் தேசத் துரோகிகளாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தவர்கள் தேசிய வீரர்களாக அறிவிக்கப்படவேண்டும் என்று நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய அவர்களை தேசிய வீரர்களாக வர்த்தமானி மூலம் வெளியிடும் நிகழ்வு இன்று மாலை 4மணிக்கு ஸ்ரீ தலதா மாளிகையில் நடைபெறவுள்ளது.

இந்த தேசிய உத்தமாபிவந்தனா நிகழ்வை வெகுஜன ஊடக அமைச்சு மற்றும் அரச தகவல் திணைக்களம் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

1804 ஜுன் 07ஆம் திகதி பிரித்தானிய அரசால் தேசத்துரோகிகளாக பிரகடனம் செய்யப்பட்ட 190 பேருக்கு எதிரான வரத்தமானி அறிவித்தலை நீக்கி அவர்களை நாட்டுக்காக போராடிய தேசிய வீரர்கள் என பிரகடணம் செய்யுமாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதுதொடர்பாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்துவதாக இராஜாங்க அமைச்சருக்கு கடிதமொன்றின் மூலம் அறிவித்திருந்தாலும் சுதந்திர வீரர்களை தேசிய வீரர்களாக பிரகடனப்படுத்தும் தேசிய நிகழ்வில் முஸ்லிம்கள் ஒருவரின் பெயராவது இடம்பெற்றிருக்கவில்லை.

இதுதொடர்பாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி வெகுஜன ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலகவைத் தொடர்புகொண்டு கேட்டபோது, சுதந்திர போராளிகளை தேசிய வீரர்களாக பிரகடனப்படுத்தும் திட்டத்தின் முதல் கட்டமாக உயிரிழந்த, சிறை பிடிக்கப்பட்ட, நாடு கடத்தப்பட்டவர்களின் பெயர்களே உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் தகவல்களும் இந்த ஆண்டுக்குள் உள்வாங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பான மேலதிக விபரங்களை அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி ரங்க கலன்சூரியவைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் ஊடக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி கலாநிதி ரங்க கலன்சூரியவைத் தொடர்புகொண்டு கேட்டபோது, சுதந்திரத்திற்காக போராடிய முஸ்லிம்களின் பெயர்களும் பட்டியலில் உள்ளதாகவும் அடுத்தடுத்த கட்டங்களில் அவையும் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படும் என்றும் தெரிவித்ததாக கூறினார்.

## நிதி அமைச்சர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அத்தோடு நிதியமைச்சர் ரவிகருணாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்பில் தெரிவித்த கருத்துகளை வாபஸ் பெறவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்;.

பொரளையில் அமைந்துள்ள என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இக்கருத்தினை கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேபர்சுவல் ட்ரசரிஸ் மற்றும் பிணைமுறி சர்ச்சை தொடர்பில் நாம் தொடர்ச்சியாக எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகிறோம். இந்நிலையில், இதுதொடர்பில் பேச்சு நடத்த நேற்றை தினம் (நேற்று முன்தினம்) மத்திய வங்கிக்கு நாம் விஜயம் செய்திருந்துபோதும்; பேபர்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் அனுமதியை தற்காலிகமாக ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரியிருந்தோம்.

பேர்சுவல் ட்ரெசரிஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இந்த மோசடியின் விளைவாக பொருளாதார பிரச்சனைகளுக்கு அரசு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. வங்கிகள் மற்றும் மத்திய வங்கியின் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு மத்திய வங்கி மேற்கொள்ளும் முயற்சிகளை எட்டி உதைக்கும் வகையிலேயே அரசின் செயற்பாடுகள் அமைகின்றன.

இதற்கு அண்மையில் நிதியமைச்சர் முன்னாள் ஜனாதிபதி தொடர்பில் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்தே சான்றாக இருக்கின்றது. இவ்வாறு பொறுப்பற்ற வகையில் பொய்களை கூறிவரும் நிதியமைச்சரை வீட்டுக்கு அனுப்பவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் பெயரை சுட்டிக் காட்டி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலானது பொய்யான ஒரு தரவாகும்.

மக்களைத் திசைதிருப்பும் இக்கருத்துக்கள் பொய் என ஆதாரத்துடன் நாம் நிரூபிக்கத் தயாராகவே இருக்கிறோம். ஆனால், அதன்பின்னர் நிதியமைச்சர் பதவியிலிருந்து அவர் விலகவும் தயாராகிக் கொள்ள வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்பில் தெரிவித்த கருத்துகளை அவர் வாபஸ் பெறவேண்டும் என்றும் தெரிவித்தார்.

## போராட்டங்களை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆர்ப்பாட்டங்களால் நல்லாட்சியைக் கவிழ்க்க முடியும் என்று நினைப்பது முட்டாள் தனமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறிகொத்தவில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அக்கருத்தினை அவர் வெளியிட்டார்.

இதன்போது மேலும் கூறிய அவர்,

நாட்டில் தற்போது தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வருவதானது பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. கொழும்பையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் இலக்குவைத்து நடத்தப்படும் இந்த போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களால் வீதிகள் மூடப்பட்டு பொதுமக்கள், வர்த்தகர்கள் என்போர் பாரிய சிரமத்துக்கு உள்ளாவதோடு, நாட்டின் பொருளாதாரமும சரிவை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது.

ஒரு காலத்தில் அரசியல்வாதிகளிடமோ அல்லது சம்பந்தப்பட்ட தரப்பிடமோ பிரச்சினை என்ன எனக் கூறிய பின்னர், அதற்கான உரிய தீர்வானது உரிய காலத்தில் கிடைக்காத இறுதிக் கட்டத்தில் தான் சம்பந்தப்பட்ட மக்கள் போராட்டத்தில் இறங்குவார்கள்.

ஆனால், தற்போது போராட்டம் செய்யும் போது தான் என்ன பிரச்சினை என்றே தெரியவருகின்றது. நாமும் எதிர்க் கட்சியில் இருக்கும்போது போராட்டங்களை நடத்தியுள்ளோம் என்றாலும் இவ்வாறு வாரத்தின் பொரும்பான்மையான நாட்களை வீதிகளில் கழிக்கவில்லை. உண்மையில், இது மிகவும் பிழையான ஒரு கலாசாரமாகும். இவ்வாறான செயற்பாட்டின் பின்னணியில் ஒரு அரசியல் நோக்கமொன்று இருக்கின்றது என்றே தெரிகின்றது.

அதாவது, தோல்வியுற்ற ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினர்கள் எமது நல்லாட்சியைக் கவிழ்த்து மீண்டும் ஆட்சியை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் தான் இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இப்படி எப்போதும் பிரச்சினைகளையே ஏற்படுத்திக் கொண்டிருந்தால் மக்கள் மனதில் மாற்றங்களை ஏற்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றிவிடலாம் என அவர்கள் நினைத்துள்ளார்கள்.

இதற்காகத் தான் தற்போது எதற்கெடுத்தாலும் ஆர்ப்பாட்டங்களை அவர்கள் நடத்துகிறார்கள். மேலும், இராணுவத்தினரை நல்லாட்சி அரசு அவமதிக்கின்றது, காட்டிக்கொடுக்கின்றது எனக் கூறித் தான் அவர்கள் பிரதானமாக போராட்டங்களை நடத்துகின்றனர்.

இராணுவத்தினர் குற்றமிழைத்திருந்தால், அவர்கள் மோசடி செய்திருந்தால், அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தால் அவர்களை எவ்வாறு கைது செய்யாமல் இருப்பது? இராணுவம் என்றாலும் அவர்களும் இந்நாட்டின் பொதுமக்கள் தான். நாட்டின் அடிப்படைச் சட்டங்கள் இவர்களிடத்திலும் செல்லுபடியாகும்.

நாம் தேவையில்லாமல் எவரையும் கைது செய்யவோ சிறைவைக்கவோ இல்லை. மாறாக தற்போது இராணுவத்தினருக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினர்கள் தான் ஒருகாலத்தில் இராணுவத் தளபதியையே சிறையில் தள்ளும்போது பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போதெல்லாம் இவர்கள் எங்கிருந்தார்கள்?

நல்லாட்சி அரசு ஆட்சியமைத்து இரண்டு வருடங்கள் தான் கடந்துள்ளது. இதற்குள் எமது அரசை இராணுவத்துக்கு எதிரானது எனக் கூறி இராணுவ புரட்சியொன்றை ஏற்படுத்தத் தான் தோல்வியுற்றத் தரப்பினர் முயற்சித்து வருகின்றனர். இதுவிடயம் தொடர்பிலெல்லாம் தற்போது எமது அரசும் கவனம் செலுத்தியுள்ளது. அந்தவகையில், நாட்டில் தற்போது இடம்பெறும் போராட்டங்கள் தொடர்பில் அரசு வெகுவிரைவிலேயே ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்றார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

### பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் தொடர்:

# இலங்கை அணியின் தலைவராக மீண்டும் ஹேரத்
## புதுமுக வீரரான மலிந்தவுக்கு டெஸ்ட் வாய்ப்பு!



மலிந்த



பீ.எப்.எம் றிஷாட்

பங்களாதேஷ் அணிக்கெதிராக நடைபெறவுள்ள டெஸ்ட் தொடருக்கு இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ரங்கன ஹேரத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இறுதியாக இவர் சிம்பாப்வே அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்கு தலைமை பொறுப்பேற்று, குறித்த தொடரை இலங்கைக்கு வென்றுக்கொடுத்தார். இந்நிலையில் மீண்டும் ஹேரத் இலங்கை டெஸ்ட் அணியின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கடந்த மாதம் நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியின் போது இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மெத்யூஸ் உபாதைக்குள்ளானார். இதனையடுத்து பங்களாதேஷ் அணியுடனான டெஸ்ட் தொடரில் மெத்யூஸிற்கு ஓய்வளிக்க தெரிவுக்குழுவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, இடதுகை சுழற்பந்துவீச்சாளரான மலிந்த புஷ்பகுமார முதல் தடைவையாக இலங்கை தேசிய டெஸ்ட் குழாமுக்குள் அழைக்கப்பட்டுள்ளார். இலங்கை ஏ அணிக்காக விளையாடிவரும் மலிந்த புஷ்பகுமார, இங்கிலாந்து லயன்ஸ் அணியுடனான தொடரில் சிறப்பாக விளையாடி, முதல் டெஸ்ட் போட்டியில் 8 விக்கட்டுகளையும், இரண்டாவது போட்டியில் 13 விக்கட்டுகளையும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இம்முறை கழகங்களுக்கிடையிலான முதற்தரப் போட்டியில் 97 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ள மலிந்தவுக்கு, பங்களாதேஷுடனான டெஸ்ட் தொடரில் முதற்தடவையாக விளையாடுவதற்கு அழைக்கப்பட்டுள்ளார். எனினும், ரங்கன ஹேரத்தைப் போன்று பந்துவீசுகின்ற இடகை சுழற்பந்து வீச்சாளரான மலிந்த, இறுதி பதினொருவர் அணியில் இடம்பெறுவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், தென்னாபிரிக்க அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய திமுத் கருணாரத்ன, கௌஷால் சில்வா ஜோடி, மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர். எனினும், திமுத் கருணாரத்ன நேற்றுமுன்தினம் நிறைவடைந்த இங்கிலாந்து லயன்ஸ் அணியுடனான போட்டியில் இரட்டைச்சதம் கடந்து அசத்தியிருந்தார். எனவே, திமுத்தை அணியில் இடம்பெறச்செய்து, கௌஷால் சில்வாவை அணியில் இருந்து நீக்குவதற்கும் தெரிவுக்குழுவினர் தீர்மானித்துள்ளனர். இந்நிலையில், தென்னாபிரிக்க மற்றும் அவுஸ்திரேலிய தொடரில் சிறப்பாக விளையாடிய விக்கெட்காப்பாளரும், ஆரம்ப துடுப்பாட்ட வீரருமான நிரோஷன் திக்வெல்லவுக்கு டெஸ்ட் அணியில் மீண்டும் வாய்ப்பு வழங்குவதற்கும், கடந்த காலங்களில் மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வருகின்ற தினேஷ் சந்திமால் மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகிய வீரர்களை அணியில் மீண்டும் இணைத்துக்கொள்ளவும் தெரிவுக்குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

இதே வேளை, தென்னாபிரிக்க அணியுடனான டெஸ்ட் தொடரில் இடம் பெற்றிருந்த இளம் வேகப் பந்து வீச்சாளர் விகும் சன்ஜயவுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, பங்களாதேஷ் அணிக்கெதிரான அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை அணி விபரம் வருமாறு: ரங்கன ஹேரத் (தலைவர்), உபுல் தரங்க, தினேஷ் சந்திமால், நிரோஷன் திக்வெல்ல, குசல் மெண்டிஸ், திமுத் கருணாரத்ன, தனஞ்சய டி சில்வா, அசேல குணரத்ன, சுரங்க லக்மால், லஹிரு குமார, நுவன் பிரதீப், விகும் சன்ஜய, மலிந்த புஷ்பகுமார, தில்ருவன் பெரேரா மற்றும் லக்ஷான் சந்தகென்.

### பிக் மெட்ச் கிரிக்கெட் போட்டிகள்:
# விசேட ஆணையாளர் நியமனம்



பீ.எப்.எம் றிஷாட்

நாட்டிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் தற்போது இடம் பெற்றுவருகின்ற விளையாட்டுச் சமர் என்றழைக்கப்படுகின்ற பிக் மெட்ச் போட்டிகளுக்காக கல்வி அமைச்சின் உத்தரவிற்கமைய விசேட போட்டி ஆணையாளர்(MATCH COMMISSIONER) ஒருவரை நியமிக்கும்படி பாடசாலை கிரிக்கெட் சங்கங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளின் போது மைதானத்திலும், மைதானத்திற்கு வெளியிலும் ஒழுங்கீனமாக நடந்துகொள்ளும் பாடசாலை மாணவர்களுக்கு எதிராக தனிப்பட்ட முறையிலும், குழுக்கள் ரீதியாகவும் தண்டனை வழங்குகின்ற நடைமுறையொன்றை கையாளுவதற்கு கல்வி அமைச்சு மற்றும் பாடசாலை கிரிக்கெட் சங்கம் ஆகியன தீர்மானித்துள்ளது.

எனவே இம்முறை பிக் மெட்ச் போட்டிகளின் போது ஒழுங்கீனமாக நடந்துகொள்கின்ற மாணவர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கல்வி அமைச்சினால் பாடசாலை கிரிக்கெட் சங்கத்துக்கு அனுமதி வழங்கியுள்ள அதேநேரம், அம்மாணவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கும், அறிக்கை சமர்பிக்கவும் அறிவுறுத்தியுள்ளது. அத்துடன், இப்புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பிக் மெட்ச் போட்டிகளை நடத்துகின்ற பாடசாலைகளின் அதிபர்கள், விளையாட்டுத்துறை ஆசிரியர்கள், கல்வியமைச்சின் அதிகாரிகள் மற்றும் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் அதிகாரிகளின் பங்குபற்றலுடன் விசேட கலந்துரையாடலொன்று இன்று மதியம் 2 மணிக்கு கொழும்பு லும்பினி கல்லூரியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முகாமையாளராக குருசிங்க நியமனம்?



இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய முகாமையாளராக இலங்கை அணியின் முன்னாள் வீரர் ஹசங்க குருசிங்கவை நியமிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு இலங்கை அணி உலகக்கிண்ணத்தை வெற்றிகொண்ட போது இவர் இலங்கை அணியின் வீரராக விளையாடியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 90 காலப்பகுதிகளில் இலங்கை அணியில் விளையாடிய ஹத்துருசிங்க, வேகப்பந்துவீச்சாளராகவும், துடுப்பாட்ட வீரராகவும் இலங்கை அணிக்கு பல் வேறு வெற்றிகளையும் பெற்றுக்கொடுத்துள்ளார். எனினும், கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வுபெற்றுள்ள இவர் தற்போது குடும்பத்தாருடன் அவுஸ்திரேலியாவில் வசித்து வருகின்ற நிலையிலேயே இவர் இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய முகாமையாளராக தெரிவு செய்யப்படவுள்ளதாக கிரிக்கெட் வட்டார தகவல்கள் தெரிவித்துள்ளன. எனினும், கடந்த டிசம்பர் மாதம் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தின் போது ஏற்கனவே கடமையாற்றிவந்த சரித் சேனநாயக்கவை நீக்கி இலங்கை அணியின் முகாமையாளராக முன்னாள் வீரரும், பிரபல வர்ணனையாளருமான ரஞ்சித் பெர்ணான்டோ நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளுக்கிடையிலான றக்பி:
# தர்மராஜவை வென்றது இசிபத்தான



(வத்துகாமம் நிருபர்)

பாடசாலைகளுக்கிடையே இடம் பெற்று வரும் றகர் போட்டி ஒன்றில் கொழும்பு இசிபத்தான கல்லூரி 18-12 என்ற புள்ளி அடிப்டையில் கண்டி தர்மராஜ கல்லூரியை வெற்றி கொண்டது.

கண்டி போகம்பறை மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் இடைவேளையின் போது 3-7 என்ற அடிப்டையில் தர்மராஜ கல்லூரிமுன்னிலை வகித்தபோதும் போட்டி முடிவில் 18-12 என்ற அடிப்டையில் தோல்வியைத் தழுவியது.

இசிபத்தான சார்பில் ட்ரைளை வைத்தோர், கே. சபாநாயக்கா- 2, ரவிந்து அஞ்சுலா-1, டீலக ஹெட்டியாரச்சி 1 பெனல்டி மூலம் மொத்தம் 18 புள்ளிளைப் பெற்றனர்.

தர்ம ராஜ சார்பாக சாமிக பேரேரா, சந்தீப்ப ஹேவகே தலா 1 ட்ரை வீதமும் கிஹான் இசார 1 கொனவேசன் மூலமும் மொத்தம் 12 புள்ளிகள் பெற்றனர்.



சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை (26) இடம்பெற்றது. கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்த இந்நிகழ்வில், அறபா இல்லம் 354 புள்ளியை பெற்று முதலாமிடத்தையும், மர்வா இல்லம் 317 புள்ளியை பெற்று இரண்டாமிடத்தையும், சபா இல்லம் 294 புள்ளியை பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டது. இந்நிகழ்வில் சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம், பிரதிக்கல்வி பணிப்பாளர் எம்.எச்.எம்.பாறூக், கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.ஏ.சபூர்தம்பி, உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.முஸ்தாக் அலி, ஆசிரிய ஆலோசகர் கே.எம்.எஸ்.நஜாஸ், பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஜெஸ்மி எம்.மூஸா)

# பி.சி.சி.ஐ. ஒப்பந்தம்:
## ஸ்டார் இந்தியா விலகல்!




கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக, 2014 முதல் இந்திய கிரிக்கெட் அணியின் அதிகாரப்பூர்வ சீருடை விளம்பரதாரராக ஸ்டார் இந்தியா நிறுவனம் இருந்து வந்தது. இந்நிலையில் பிசிசிஐயுடனான ஒப்பந்தத்திலிருந்து ஸ்டார் இந்தியா நிறுவனம் விலகியுள்ளது.

இதுகுறித்து அந்நிறுவனத்தின் தலைமை அதிகாரி உதய் சங்கர் கருத்து வெளியிடுகையில், இந்திய கிரிக்கெட்டில் நிலவும் தெளிவற்ற சூழலில், மீண்டும் ஒப்பந்தம் கோர வேண்டாம் என முடிவெடுத்துள்ளோம். பிசிசிஐ கோரும் உறுதிமொழிகள் எல்லாம் கடினமானவையாக உள்ளன. பல விஷயங்களில் ஐசிசிக்கும் பிசிசிஐக்கும் இடையே தெளிவான புரிதல்கள் இல்லை. எனவே இந்த முடிவை எடுக்கவேண்டியுள்ளது என்று கூறியுள்ளார்.

பிசிசிஐ மற்றும் ஸ்டார் இந்தியா நிறுவனத்துடனான ஒப்பந்தம் இந்த மார்ச் மாதத்துடன் நிறைவு பெறுகிறது. இதற்கு முன்பு 12 வருட காலம் சஹாரா நிறுவனம் இந்திய கிரிக்கெட் அணியின் விளம்பரதாரராக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணியில் மீண்டும் ஷமி?

உள்ளூர் கிரிக்கெட் போட்டியில் உடற்தகுதியை நிரூபித்து மீண்டும் தேசிய அணிக்கு திரும்புவதற்கான முழு முயற்சிகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஷமி தெரிவித்துள்ளார். அதன்படி விஜய் ஹசாரா ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பெங்கால் அணி சார்பில் இறுதி இரு போட்டிகளில் விளையாடவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் இடம் பெற்ற இங்கிலாந்து அணிக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியின் போது ஷமி, உபாதைக்கு உள்ளானார். தற்போது அவர் குணமடைந்துள்ளார். எனினும், உபாதைக்கு உள்ளான நிலையில் வீரரொருவர் அணியிலிருந்து விலகினால், அதன் பின்னர் அவர் உள்ளூர் போட்டியில் விளையாடி உடற்தகுதியை நிரூபிக்க வேண்டும் என இந்திய தேசிய அணியின் தலைமை பயிற்சியாளர் அனில் கும்ப்ளே குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய, தற்போது வலைப்பயிற்சியில் ஈடுபட்டுவரும் ஷமி, விஜய் ஹசாரே தொடர் மூலம் உடற்தகுதியை நிரூபித்து இந்திய அணியில் மீண்டும் இடம்பிடிக்க திட்டமிட்டுள்ளார்.




சர்வதேச இராணுவ தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற சர்வதேச இராணுவ விளையாட்டு தின ஓட்ட நிகழ்வு காலிமுகத்திடலில் கடந்த 18ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் முப்படை தளபதிகள் சகிதம் நூற்றுக் கணக்கான பாதுகாப்பு படைவீர்கள் கலந்து கொண்டனர். குறித்த இந்நிகழ்வில் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி, எயார் சீப் மார்ஷல் கோலித்த குணதிலக பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். இரண்டு கிலோமீற்றர் தூரத்தைக் கொண்ட சீஐஎஸ்எம் டே ரன் நிகழ்வு, காலிமுகத்திடலில் இருந்து பாதுகாப்பு சேவைகள் கல்லூரிவரை இடம்பெற்றது. இந்நிகழ்வில் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா, கடற்படை தளபதி, விமானப்படை தளபதி, முப்படையின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# நுவரெலியாவில் நவீன தொழில்நுட்பத்திலான
# கிரிக்கெட் மைதானம் நிர்மாணம்




பீ.எப்.எம் றிஷாட்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விசேட வேண்டுகோளுக்கு அமைய கடல்மட்டத்திலிருந்து அதிக உயரத்தில் அமைந்துள்ள ரதல்லை விளையாட்டரங்கை அதியுச்ச உஷ்ணத்தைக் கொண்ட சிறந்த கிரிக்கெட் மைதானமாக தரமுயர்த்தவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கடல்மட்டத்திலிருந்து உயரமான இடத்தில் அமையப்பெற்றுள்ள நுவரெலியாவில் 345 ஹெக்டேயர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ள இவ் அதியுச்ச தொழில்நுட்பத்தைக் கொண்ட விளையாட்டுத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான வர்த்தக உடன்படிக்கை விளையாட்டுத்துறை அமைச்சில் நேற்றுமுன்தினம் காலை கைச்சாத்திடப்பட்ட பிறகு உரையாற்றுகையில் விளையாட்டுத்துறை அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கையில் பிரான்ஸ் நாட்டின் எலிப்ஸ் புரஜக்ட்ஸ் எஸ்.ஏ.எஸ். நிறுவனத்தின் தலைவர் பிக்கார்ட் ஒலிவியரும் விளையாட்டுத்துறை அமைச்சு சார்பில் அமைச்சின் செயலாளர் கலாநிதி டி.எம்.பி.பீ திசாநாயக்கவும் கைச்சாத்திட்டனர்.

நுவரெலியாவில் நிர்மாணிக்கப்படவுள்ள நவீன விளையாட்டுத் தொகுதி எவ்வகையிலும் குதிரைப்பந்தயத் திடலுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அமைக்கப்படும் எனவும் இதன் மூலம் நாம் எதிர்பார்க்கும் விளையாட்டுத்துறை அபிவிருத்தி ஏற்படும் எனவும் அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். இலங்கையில் கடல்மட்டத்திலிருந்து உயரமான இடத்தில் ஒரு விளையாட்டரங்கு இல்லாத நீண்டகால குறை நிவர்த்திசெய்யப்படவுள்ளதாக அவர் கூறினார்.

சீனாவில் இத்தகைய இரண்டு விளையாட்டுத் தொகுதிகள் இருப்பதுடன், ஜப்பானிலும் ஒன்று இருக்கின்றது. இலங்கையில் 10 ஆயிரம் மில்லியன் யூரோ செலவில் அமைக்கப்படவுள்ள விளையாட்டுத் தொகுதி மற்றும் பயிற்சி நிலையம் ஆகியவற்றுக்கான நிர்மாணப் பணிகள் எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ளதுடன் மூன்று வருடங்களில் இந்தத் திட்டம் பூர்த்தி செய்யப்படவுள்ளது. இதன்படி, ஆசியாவிலுள்ள 4ஆவது அதிக உஷ்ணத்தைக் கொண்ட விளையாட்டு மைதானமாக இது அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மெஸ்சி 400!
# ரொனால்டோ 57!

உலகின் தலைசிறந்த வீரர்களாக திகழும் மெஸ்சி, ரொனால்டோ இருவரும் கால்பந்தில் புதிய மைல்கல்லை எட்டி சாதனை படைத்துள்ளனர். உலகின் தலைசிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவரான அர்ஜென்டினா கால்பந்து வீரர் மெஸ்சி, பார்சிலோனா அணிக்காக 400ஆவது வெற்றியை பெற்றுத் தந்து அசத்தியுள்ளார். ஸ்பெயினின் மெட்ரிட் நகரில், லா லிகா கால்பந்து தொடருக்கான லீக் போட்டி நடைபெற்றது. இதில் பார்சிலோனா, அத்லெடிகோ மெட்ரிட் அணிகள் மோதின. ஆட்டநேர முடிவில் பார்சிலோனா அணி 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதன்மூலம் மெஸ்சி இடம்பெற்ற பார்சிலோனா அணி 400ஆவது வெற்றியை பதிவு செய்தது. கடந்த 2003இல் பார்சிலோனா அணிக்காக அறிமுகமான இவர், இதுவரை 566 போட்டிகளில் விளையாடி உள்ளார். இதேசமயம், வில்லாரியல் நகரில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் ரியல் மெட்ரிட் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வில்லாரியல் அணியை தோற்கடித்தது. இப்போட்டியில் பெனால்டி வாய்ப்பில் கோலடித்த கிறிஸ்டியானோ ரொனால்டோ, லா லிகா தொடரில் பெனால்டி வாய்ப்பில் அதிக கோல் அடித்த வீரர் என்ற சாதனை படைத்தார். இதுவரை இவர், 57 பெனால்டி கோல் அடித்துள்ளார்.



Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 01ST MARCH 2017